# இயல் - 3

# ஆளுமை

## 3.0 ஆளுமை விளக்கம்

ஆளுமை என்னும் தலைப்பிலான இவ்வியலில் ஆளுமை குறித்த பொருள் விளக்கம், அறிஞர்களின் கருத்தியல்கள், வகைமைகள் போன்ற பல்வேறு தளங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

" 'ஆளுமை' என்பது ஒருவரது மனப்பான்மையைப் பொறுத்தே அமையும். இவ்வடிப்படையில் உளப்பகுப்பாய்வாளர்கள் மனிதனின் நினைவிலி மனத்தினின்று எழும் வலிமை வாய்ந்த 'இத்'(Id) என்கிற உள்ளச் சக்தி, சமூகச் சூழ்நிலையின் சட்டதிட்டங்களோடும் கட்டுப்பாடுகளோடும் இழைவதனால் ஏற்படுவதே 'ஆளுமை'"[1] என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகின்றது.

ஒரு தனிமனிதனின் அகம், புறம், ஆகியவற்றின் வெளிப்பாடே ஆளுமையாகும். அகத்தின் வெளிப்பாடாக உணரப்படும் ஆளுமை என்பது உள்ளத்து அகஉணர்வு, எண்ணங்கள், ஆசை, மனவெழுச்சி, சிந்தனை, கற்பனைத்திறன், அன்பு, கோபம், மகிழ்ச்சி, சோகம், கனவு, இரக்கம், ஏக்கம் பொறாமை போன்றவையாகும். புறத்தின் வெளிப்பாடாக உணரப்படும் ஆளுமையாவது பிறருடன் பழகும் முறை, அன்பு செலுத்துதல், உண்ணுதல், ஆடை அணிதல், உதவும் மனப்பான்மை போன்றவையாகும். அவ் ஆளுமைப் பண்புகளே ஒரு மனிதனின் தனித்தன்மையை வெளிப்படுத்துவன ஆகும்.

ஆளுமை என்பது ஒருவனுடைய சிறப்பு, மேன்மை, மதிப்பு, புகழ், வெற்றி ஆகியவற்றை உள்ளடக்கிய தொகுப்பாகும். சிறப்பு என்பது ஒருவனுடைய நற்பண்பாகும். மேன்மை என்பது இந்நற்பண்புகளால் கிடைக்கும் உயர்வாகும். மதிப்பு என்பது இவ்வுயர்வால் சமூகத்தில் கிடைக்கப்பெறும் அங்கீகாரமாகும்.

அங்கீகாரத்தால் கிடைக்கப் பெறுவது வெற்றியாகும். இத்தகைய கூறுகள் அனைத்தும் ஆளுமையின் வெளிப்பாட்டுக் கூறுகள் ஆகும்.

"ஆளுமை என்பது (ஆள் +மை) ஆண்மை என்ற சொல்லின் திரிபாகும். ஆள் என்பதற்கு ஆண்மகன், சமர்த்தன், வீரன், காலான், கணவன், ஊழியன், தொண்டன், வளர்ந்த ஆள், பெண்பாற் பெயர் விகுதி, பெண்பால் வினைமுற்று விகுதி என்று தமிழ் லெக்சிகன் பொருள் கூறி உள்ளது."[2] "கருநாடக மாநிலத்தில் கி.பி 7முதல் 11ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்த சிற்றரசர்களின் தலைநகரம் ஆளுவகேடம் ஆநாயிரம் என்பதாகும்."[3]

சிற்றரசர்கள் ஆளுவதைக் கொண்டே இத்தலைநகரத்திற்கு இப்பெயர் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 'ஆளுமை என்பது ஒவ்வொரு மனிதனின் தனித்தன்மையை உள்ளடக்கியதே' என்பதை உணர முடிகிறது. ஆண்மை, ஆளுமை என்பன ஆளுமை பற்றிய கருத்து உருவாக்கத்திற்கு அடிப்படைச் சொற்களாக அமைந்துள்ளன எனலாம் இவ்வாளுமை என்பதற்குரிய பெர்சனாலிட்டி (Personality) என்ற ஆங்கிலச் சொல், பெர்சனா (Persona) என்ற லத்தின் சொல்லில் இருந்து உருவானதே ஆகும்."[4]

மேலும் 'பெர்சனா' என்பது நடிகர்கள் அணியக்கூடிய முகமூடியைக் குறித்து வந்துள்ளது. ஐரோப்பிய நாடுகளில் மத்திய காலத் தொடக்கத்தில் நாடக நடிகர்கள், எத்தகைய முகமூடி அணிந்த பாத்திரத்தை ஏற்று நடிக்கின்றனரோ அத்தகைய பாத்திரமாகவே மற்றவர்களுக்குத் தோன்றுகிறார்கள். எனவே முதன் முதலில் 'ஆளுமை' என்பது 'ஒருவர் மற்றொருவருக்கு எப்படித் தோற்றமளிக்கிறார்" என்பதைச் சுட்டியது. ஆளுமை என்பது ஒரு செயல். அச்செயலானது, நிகழ்த்துனருக்கும் பார்வையாளருக்கும் இடையே நடைபெறும் ஓர் இடைவினை நிகழ்வாகக் கொள்ளத்தக்கதாகும். "மனிதனுடைய முகம் என்பது ஓர் அர்த்தமுள்ள சமூகக்குறியாகவும் அம்முகத்தினில் அவன் ஏற்படுத்துகின்ற ஒவ்வொரு மாற்றமும்

அவனுடைய சமூகமதிப்புக்களை விளக்குவதாகவும் இருக்கிறது."[5] ஆகவேதான் முதன் முதலில் ஆளுமை எனும் சொல்லை முகம் தொடர்பான ஒன்றாகக் கருதினார்கள். ஆளுமையின் முதல் வரையறையென்பது முக அமைப்பை அடிப்படையாகக் கொண்டது. இதன் பரிணாம வளர்ச்சியாகத்தான் ஆளுமையை வரையறை செய்துள்ளனர். இதன் அடிப்படையில். "ஆளுமை என்பது ஒருவருடைய புறத்தோற்றத்தின் வழியாக வெளிப்படுகின்ற குணநலன்கள், தன்மைகள், சிறப்பு அம்சங்கள் இவை பற்றி ஒரு பொதுவான தோற்ற அமைவு என்று பொருள்படும்"[6] என்பர். எனவே ஆளுமை என்பது அழகானது, நல்லது, நேர்மையானது, இனிமையானது, ஏழ்மையானது என்றெலாம் அடையாளப்படுத்தியும் பேசப்படுகிறது.

இந்தக் கருத்துகளின் அடிப்படைகளில் "ஆளுமை" என்ற சொல்லின் பொருளாக ஒருவருடைய உடல் தோற்றம், முகத்தோற்றம், நடை, உடை, பாவனை இவை போன்ற சிறப்புக்கூறுகளின் ஒட்டுமொத்த வடிவம் என்று வரையறை செய்யப்பட்டது. ஆளுமை பற்றிய இத்தகைய வரையறைகள் எல்லாம் ஒருவகையில் குறையுடையனவாகவே உள்ளன. ஆளுமை என்பது வெளித்தோற்றத்தையும் செயல்பாடுகளையும் உள்ளடக்கிய போதிலும் அது ஒருவரின் புறத்தோற்றத்தை விட ஆழமானது, அகலமானது. ஒரு வகையான அக அமைப்பபையும் சமூகச்சூழலை ஒட்டிய வளர்ச்சியையும் உள்ளடக்கியது. எனவேதான் ஆளுமை என்ற சொல்லை முழுமையாக வரையறை செய்வது என்பது அவ்வளவு எளிதான ஒன்றாக அமையாமல் போகிறது. ஆளுமை என்பது புறத்தோற்றம் என்ற ஒற்றைப் பரிமாணத்தை தவிர்த்துப் பல்வேறு பரிமாணங்களை உள்ளடக்கிய ஒன்றாக அமைகிறது.

## 3.1 ஆளுமை பற்றி அறிஞர்களின் கூற்று

### 3.1.1 மார்டன் பிரின்ஸ்: (Modern Prince)

"ஆளுமை என்பது உயிரியில் அடிப்படையில் ஒருவருடைய அகக்கட்டுப்பாடு, உந்துதல்கள், ஒருவகைப்போக்குகள்(நடத்தை), ஆசைகள், உணர்ச்சிகள் இவைகளின் ஒட்டு மொத்த வடிவமாகவும் அனுபவத்தின் மூலமாகப் பிறக்கின்ற மனப்பாங்கு இவைகளையும் உள்ளடக்கிய ஒன்றாகும்."[7] என்று கூறுகிறார். எனவே ஆளுமை என்பது ஒரு சாடிக்குள் ஊற்றப்படும் நீரைப்போன்றது. அந்த நீர் எவ்வாறு அந்தச் சாடியின் வடிவத்தைப் பெறுகின்றதோ, அதுபோல ஆளுமை என்பது ஒரு தனி ஆணையோ, பெண்ணையோ முழுமையாக ஆக்ரமித்துச் செயல்படும் ஒன்றாகும். ஆளுமையை ஒருவருடைய புறநடத்தையோடு மட்டும் தொடர்புபடுத்துவது என்பது ஆளுமையின் முழுப்பரிமாணத்தையும் வெளிக் கொணர்வதில்லை. எனவே தான் ஆளுமை பற்றிக் குறிப்பிடும் அறிஞர்கள் ஆளுமை என்பது உடல்கூறு, உளக்கூறு ஆகியவற்றை உள்ளடக்கியஒன்று என்று கூறுகின்றனர். ஜி.டபிள்யூ.ஆல்போர்ட் என்பவர் "ஒரு தனிமனிதன் தன்னுடைய உடல் கூறு, உளக்கூறு ஆகியவற்றை ஒரு கட்டுக்கோப்போடு இயக்கிச் சூழல் அமைவுக்கு ஏற்றார் போலத் தன்னையே மாற்றிக்கொள்ளக் கூடிய தகைமையே ஆளுமை என்பதாகும்"[8] என்று கூறுகிறார்.

### 3.1.2 எச்.ஜே ஐசங்க் (H.J.Eysenck)

உடல் கூறு, உளக்கூறு ஆகியவற்றுறுடன் சூழல் என்பதையும் இணைத்து ஆளுமை என்பது எச்.ஜே ஐசங்க், "ஒரு தனிமனிதரின் பண்பு, இயல்பு, அறிவு, உடல்வாகு, இவற்றின் நிலையான, தொடர்ந்து செயல்படக்கூடிய ஒட்டு மொத்த உருவாக்கமாகும். இந்த உருவாக்கம் சூழலுக்கு ஏற்பச் சிறப்பாகச் செயல்பட உதவுவதும் ஒருவரின் ஆளுமையாகும்" என்கிறார்[9]. "குடும்பச் சூழல், சமூகச் சூழல், அச்சத்தால் எழும் சமூகத்தூண்டல் போன்றவற்றின் இணைவினால் எழும் சிறப்புக்

கூறுகளே ஆளுமை"[10] என்னும் வரையறை ஆளுமை என்பதன் பன்முகத்தன்மையைக் குறிப்பதாக உள்ளது. இவ்வாறு ஆளுமை என்பது ஒரு தனிமனிதனிடம் உள்ள குணங்களைக் குறிப்பதாகவும் உள்ளீடான ஒன்றாகவும் அமைகிறது.

### 3.1.3 கெட்டல்(Gattal)

"ஓர் ஆள் ஒரு குறிப்பிட்ட சூழலில் எவ்வாறு செயல்படுவார் என்பதை முன்கூட்டியே சொல்லுவதற்கு எது உதவுகிறதோ அதுவே ஆளுமையாகும்."[11] என்கிறார்.

மேலும் ஆளுமையை,

1. எழுச்சி வகை ஆளுமை
2. வீழ்ச்சி வகை ஆளுமை

என்றும் வகைப்படுத்தியுள்ளார் கெட்டல்.

இவ்வாறு அறிஞர் பலரும் ஆளுமை என்ற சொல்லுக்கு விளக்கமும் வரையறையும் கூறுகின்றனர்.

### 3.2 ஆளுமையின் மாறும் தன்மை

ஆளுமை என்பது ஒரு மனிதனிடம் அப்படியே நிலைத்து நின்றுவிடுவதில்லை. அது எப்போதும் மாறிக்கொண்டே இருக்கும். சிலவேளைகளில் ஆளுமை உடைபட்டுச் சிதறிப்போகும் ஆளுமைச் சிதைவுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. கடுமையான கவலை, அழுத்தம், அதிர்ச்சி, அனுபவங்கள், நீடித்த நோய்கள்,மூளைக்கும் நரம்பு மண்டலத்திற்க்கும் சேதம் ஏற்படுதல் போன்றவை ஆளுமைச் சிதைவுக்குக் காரணமாக இருக்கின்றன.

எந்த ஒரு குழந்தையும் முழு ஆளுமையோடு பிறப்பதில்லை.ஆனால் சுற்றுச்சூழலோடு உறவாடிச் செயல்படுவதால் ஆளுமையை வளர்த்துக் கொள்கிறது. எனவே மரபுக்கூறுகள் மட்டுமின்றி உடல் அமைப்பு, சமுதாயப் பண்பாட்டுத்தாக்கம்,

அனுபவம், பயிற்சி இவை எல்லாம் ஒருவருடைய ஆளுமையை வெகுவாகப் பாதிக்கின்றன.

### 3.3 ஆளுமை பற்றிய உளப்பகுப்பாய்வாளர்களின் (Psychoanalysis) கருத்துகள்

உளப்பகுப்பாய்வு என்பது நடத்தையை ஆய்வு செய்வதற்கும், மனநோய்களைக் குணப்படுத்துவதற்கும் ஏற்ற ஒரு வழிமுறையாகும். இந்த வழிமுறையில் நான்கு கூறுகள் உள்ளன அவை,

1. நோயாளியோடு இயல்பான உறவை ஏற்படுத்துவது.
2. ஒரு நபரின் நடத்தையைப் பகுப்பாய்வு செய்து அதன் வழியாக அந்த நபரின் ஆளுமைக் குறைவுக்கான அடிப்படைக் காரணிகளைக் கண்டுபிடிப்பது. இப்பகுப்பாய்வில் நோயாளியின் சுதந்திரமான பேச்சு, கனவு, அன்றாடம் நிகழும் மனநோய் தொடர்புடைய நிகழ்வுகளை ஆய்வு செய்வது ஆகியனவும் அடங்கும்.
3. உருக்குலைந்து போன மனத்தைச் சமன் செய்து மீண்டும் உருவாக்கம் செய்வது.
4. ஆய்வாளர் தன்னை நோயாளியின் உறவில் இருந்து விடுவித்துக் கொண்டு அந்த நபரின் வாழ்வின் எதார்த்தங்களை தாமாகவே அறிவது என்பனவாகும்.

மேற்சுட்டிய நான்கு வழிமுறைகளைப் பின்பற்றி சிக்மண்ட் ஃபிராய்டு (Sigmund Froud) மனிதர்களின் மனவேறுபாடுகளுக்கான காரணிகளை ஆராய்ந்தார். ஆஸ்திரிய நாட்டு உளப்பகுப்பாய்வாளரான இவர், மனித நடத்தை அடிப்படையில் மனித ஆளுமையைப் புரிந்து கொள்வதற்கான கோட்பாடுகளைக் கண்டறிந்தவராவார். இவர் ஆராய்ந்த மனத்தின் அமைப்பு பற்றிய கருத்துகள் குறிப்பிடத்தக்கன.

### 3.3.1 ஃப்ராய்டு கூற்று

ஃப்ராய்டு மனிதமனத்தை நனவு மனம் (Conscious mind), நனவடங்கு மனம் (Subconscious Mind), நனவிலி மனம் (Unconscious Mind) என்று மூன்றாகப் பாகுபாடு செய்துள்ளார். நனவு மன நிலையில் தனிமனிதனுக்கு ஏற்படும் சிந்தனை அவன் மன அனுபவங்களின் மிகச்சிறிய பகுதியே. நனவடங்கு மனம் என்பது நனவுநிலைக்கு அப்பால் நனவுக்கு புலனாகாது உள்ள பகுதியாகும். நனவிலி மனம் என்பது மனதிற்கு இதமளிக்காத வாழ்க்கை அனுபவங்கள், பாலுந்துதல் முதலான இச்சை உணர்ச்சிகள் ஒருங்கிக் கிடக்கும் ஒரு ஆழ்நிலைப் பகுதியாகும். "தனிமனித நனவிலியில் சமநிலையடையாத நிலையில் தான் அவன் நனவிலி மனம், தான் எண்ணியதைச் செய்துமுடிக்காவிட்டால் இன்னோரன் ஆகுக என்று கூட்டு நனவிலியுடன் இணைந்து செயல்பட ஆரம்பிக்கிறது."[12]

மனிதனின் மனதை மூன்று நிலைகளாகப் பிரித்த ஃபிராய்டு அதன் ஆளுமை நிலையினைப் பண்படா உள்ளம் (id) தன்முனைப்பு (Ego), மேம்பட்டதன் முனைப்பு (Super Ego) என்று 3 நிலைகளாகப் பகுத்துள்ளார். இட் (id) என்ற பண்படா உள்ளம் பிறப்பிலிருந்தே மனிதனிடம் இயல்பாக அமைந்துள்ளது. மனிதனின் உண்மை நிலையை உணர்த்தி அவனது பண்படா உள்ளத்து ஆசைகளை நிறைவேற்றுவது தன்முனைப்பாகும். மேம்பாட்டுள்ளம் என்பது பெற்றோர்களாலும் சமூகத்தாலும் எடுத்துரைக்கப்பட்ட அறநெறிகளும், பயன் மதிப்புகளும் அடங்கியது ஆகும்.

இவை தவிர மனித மனதுக்குள் வாழ்வு, இறப்பு என்னும் ஒரு வகையான உந்துதல்கள் மனித ஆளுமையை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. வாழ்வு உந்துதலின் குறிக்கோள் உயிர் ஓம்பலாகும். *லிபிடோ(lipido)* என்ற பாலியல் உந்துதல் என்பது வாழ்வுந்துதலின் சத்தியாகச் செயல்படுகிறது. ஒருவரின் ஆளுமை என்பது பெரும்பாலும் பால் உணர்வு இலக்கையே குறிக்கோளாகக் கொண்டு அமைகிறது என்று கூறுகிறார் ஃப்ராய்டு.

### 3.4 பாலுணர்வு வளர்ச்சிப் படிநிலைகள்

பாலுணர்வு என்பது பெரியவர்களுக்கு மட்டுமின்றி குழந்தைகளுக்கும் உள்ளது. குழந்தைகள் தங்களுடைய தாயின் மார்பகங்களில் முட்டி பால் அருந்தி நிறைவடைவதால் அவர்களின் பாலுணர்வு ஆசைகள் வெளிப்படுகின்றன. இதனைப் ஃப்ராய்டு குழந்தைப் பாலுணர்ச்சி என்கிறார். இத்தகைய நிலையில் ஒரு மனித வாழ்வானது ஐந்து படி நிலைகளை உடையது என்று குறிப்பிடுகிறார்.

1. சுவைத்தல் நிலை (oral stage)
2. கழிவு நிலை (Anal stage)
3. பால் உணர்வு நிலை (Phallic stage)
4. உட்செறிவு நிலை (Latency stage)
5. பால் உறுப்பு நிலை (Genital stage)

இத்தகைய வளர்ச்சி நிலைகள் ஒவ்வொன்றிலும் அந்த நிலைக்கு உகந்த சில சாதனங்களின் அல்லது வழிகளின் மூலம் ஒரு குழந்தையின் பாலுணர்வுத் தேவை நிறைவேற்றமடைகிறது. இத்தேவைகளில் குறைவு ஏற்பட்டால் நடத்தைகளில் மாறுபாடு ஏற்பட்டு துயரத்திற்கு ஆளாகும் நிலை உண்டாகிறது. இந்தத் துயரச் சூழல் ஒரு மனிதனின் இறப்பு உந்துதலோடு தொடர்புடையதாக அமைகிறது. அதனால் தான் துயரம் என்பது தனிமை நாடுவதாகவோ, வெறுப்பைத் தருவதாகவோ, குற்றம் செய்வதாகவோ, தற்கொலைக்குத் தூண்டுவதாகவோ அமைகிறது. இவற்றுள் பாலுணர்வு என்பது வாழ்வை நிலைப்படுத்தக் கூடிய சக்தியாக திகழ்கிறது. பாலுணர்வின் வழி மனித மனம் இன்பத்தைத் தேடுகிறது. இந்தப் பாலுணர்வுச் சத்தி ஒருவரின் ஆளுமையைத் தீர்மானிப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது. பாலுணர்வு உந்துதல் முறையாக நிறைவேற்றப்பட்டால் ஆளுமையும் போதுமான இயல்புத் தன்மை கொண்டதாக உருவாகும். பாலுணர்வுத் தேவை மறுக்கப்பட்டால் அல்லது தடுக்கப்பட்டால் அது ஒரு வகையான மன அழுத்தத்தை உருவாக்கி மோசமான

குழப்பங்களுக்கு ஒருவரை இட்டுச் செல்லும். அது மனநோய்களும், அசாதாரண நடத்தைகளும் உருவாகக் காரணமாகும். இவ்வாறு ஃப்ராய்டு மனித ஆளுமை குறித்து விளக்குகிறார்.

இவரைப் போலவே பல்வேறு உளவியல் அறிஞர்களும் ஆளுமை பற்றித் தாங்கள் கண்டறிந்த மெய்ம்மைகளின் அடிப்படையில் சில விளக்கங்களைத் தருகின்றனர். அக்கருத்துகள் பின்வருமாறு

### 3.4.1 ஆல்போர்ட்.ஜி.டபிள்யூ: (G.W.Allport 1877-1968)

தனிமனிதனின் உடல், உளஅமைப்புகளும் உள்ளாற்றல்களும் அவனுடைய சூழ்நிலைகளுடன் பொருத்தப்பாடு பெற்று அவனிடம் ஒருங்கிணைந்து இருக்கும் நிலைமையே அவனுடைய ஆளுமையாகும் தனிமனிதனுக்கு குழந்தைப்பருவம் முதல் இருபது வயது வரையில் ஏற்படும் அனுபவங்களை ஆல்போர்ட் எழு நிலைகளாகப் பிரித்து, இந்நிலைகளால் படிப்படியாகத் தற்கருத்து உருவாகிறது என்று கூறியுள்ளார். "தனிமனித வழக்கங்களைக் காட்டிலும் அவனுடைய நடத்தைக் கூறுகளும் மனப்பாங்குகளுமே பெரும்பாலும் அவனுடைய ஆளுமையின் அடிப்படைகளாக அமைகின்றன" என்கிறார் அவர்.

இவ்விளக்கங்களுடன் கூட இயல்புநிலை மனிதர்களின் பண்புகளுக்கும் உளக்கோளாறு நோயாளிகளின் பண்புகளுக்கும் சில வேறுபாடுகள் உள்ளன என்றும் ஆல்போர்ட் கூறுகிறார்.

### 3.4.2 அட்லர் (Adler - 1870-1937)

ஆளுமை உருவாக்கத்தில் உயர்வு மனப்பான்மையின் சிறப்பை அட்லர் வலியுறுத்துகிறார். தாழ்வுச்சிக்கல் மனிதனின் ஆளுமையையும் சமூக உறவுகளையும் பெருமளவில் பாதிக்கிறது என்றும் ஒருவனது ஆளுமை வளர்ச்சியில் அடிப்படை இயல்புக்களைக் காட்டிலும் சமூக உந்துதல்களின் செல்வாக்கு மிகுந்து காணப்படுகிறது என்றும் கூறியுள்ளார்.

### 3.4.3 காரல் குஸ்டவ் யுங் ( Caral Gustav Jung 1875-1961)

ஆளுமை உருவாக்கத்தில் தனிமனித நனவிலி (Personal unconsious) என்னும் அமைப்பை காரல் குஸ்டவ் யுங் விளக்குகிறார். குழந்தைப் பருவத்திலிருந்து ஏற்படும் அனுபவங்களின் அடிப்படையில் தனிமனித நனவிலி உருவாக்கப்படுகிறுது என்று கூறுகிறார். அவருடைய கூற்றின் படி தனி நனவிலியின் மையக் கூறு தன்முனைப்பின் கட்டுப்பாட்பாட்டிற்குள் இயங்காமல் தனித்து இயங்குவதால் அதனை மறைப்பது கடினம். மக்கள் தம்மை அறியாமலேயே தம் உள்ளச் சிக்கல்களைக் காட்டிக்கொடுக்கும் வகையில் படிக்கவோ, செயல் புரியவோ, உரையாடவோ இயங்கச் செய்யும் ஊக்கிகளாகவும் இருக்கின்றன. தன்முனைப்பு என்பது நனவு உள்ளத்தைக் குறிக்கும் என்றும், தான் அல்லது தன்னுணர்வு என்பது நனவு, நனவிலி இரண்டையும குறிக்கிறது என்றும் கூறினார். தன்முனைப்பிலிருந்து விடுதலை பெற்றத் தன்னுணர்வு, நனவிலியின் பக்கம் இயங்குகிறது. இதுவே தனிமனிதனின் உண்மையான ஆளுமையாகும் என்று காரல் யுங் கூறுகிறார்.

### 3.4.4 எரிக் ஃபிரேம் (Eric Fromme 1900-1980)

குழந்தை வளரும் நிலையில் அக்குழத்தையின் ஆளுமையில் பெற்றோர்கள் ஏற்படுத்தும் தாக்கம் பற்றி காரல் ரோஜர்ஸ் (Caral Rogers) கருத்தின் பிரதிபலிப்பாகவே எரிக் ஃப்ரேமின் கருத்தும் உள்ளது.

குழந்தைகள் சமூகத்துடன் இணைந்து செயல்படுவதற்கு ஒவ்வொரு சமூகமும் பெற்றோரையும் குடும்பத்தையுமே நம்பி இருக்கிறது. ஆனால் பெற்றோரோ அழிவு மனப்பான்மையும் வெறுப்பும் கொண்டவராக இருக்கும் போது அவர்கள் தம் குழந்தைகளைத் தம்முடைய ஆதிக்கத்திலும் அளவுக்கு மீறிய பாதுகாப்பிலும் ஈடுபடுத்தி விடுகின்றனர். இத்தகைய பெற்றோரின் நடத்தை, குழந்தைகளைப் பிற்காலத்தில் உளப்பிணி நிலைக்குக் கொண்டு செல்கிறது. பெற்றோரிடமிருந்து அன்பையும், ஆதரவையும் பெறும் குழந்தைகள் சமூகத்தின் தாக்குதல்களைச்

சமாளித்து நிலைகுலையாமல் நிற்கின்றனர். இயற்கைத் தேவைகளை எந்த அளவுக்கு நிறைவேற்றிக் கொள்ள மனிதனுக்கு சமூகம் உதவுகிறது. அந்த அளவுக்கு அவன் நல்லவனாக இருக்கின்றான்.மேலும் மனிதனிடம் விலங்கு இயல்பும் கலந்துள்ளது என்று கூறியுள்ளார் எரிக் ஃபிரேம்.

### 3.4.5 காரல் ரோஜர்ஸ் ( Caral Rogers)

தனிமனிதனின் ஆளுமை உருவாக்கத்தில் பெற்றோர்களின் இடையீட்டால் ஏற்புடும் பாதிப்பு குறித்து காரல் ரோஜர்ஸ் விளக்குகிறார். தனிமனிதன் "நான்", 'என்னுடையது' என்று எவற்றை உணர்கிறானோ, அது அவனுடைய தன்னுணர்வு ஆகிறது. தன்னுணர்வு நன்கு அமையப் பெறாதவன் உள்ளச் சிக்கல்களுக்கு ஆளாகிறான். குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் செயல்படும் பெற்றோர்கள், தம்மை அறியாமலேயே குழந்தைகளிடம் எதிர்மறை உயர்வுகளையும் தம்மைப் பற்றிய தாழ்வான மதிப்பீட்டுகளையும் உருவாக்கி விடுகிறார்கள். மிகுந்த கட்டுப்பாடுகளுக்கும் உண்மையான அகஉணர்வுகளுக்கும் இடையில் போராட்டம் நடக்கிறது. பெற்றோரும் ஆசிரியரும் குழந்தைகளால் விரும்பப்படாத வகையில் நடந்து கொள்ளும் போது அக்குழந்தைகளிடம் உளப்போராட்டம் ஏற்படுகிறது என்கிறார் ரோஜர்ஸ்.

### 3.4.6 ஆபிரகாம் மாசுலோ (Abraham Masloslo 08-1970)

ஆபிரகாம் மாசுலோ ஆளுமை என்பதை மனிதத் தேவைகளின் அடிப்படையில் விளக்குகிறார். மனிதனின் தேவைகள் எந்த அளவில் நிறைவு பெறுகின்றனவோ அந்த அடிப்படையில் அவனுடைய ஆளுமை அமைகிறது.மேலும் ஒவ்வொருவனுக்கும் தன்னுடைய முழுத்திறன்களின் வளர்ச்சியில் நாட்டம் உண்டு என்ற கருத்தினை மாசுலோ வலியுறுத்துகிறார். மனிதனின் தேவைகள் பல நிலைகளில் உள்ளன என்றும், ஆதாரத் தேவைகள் நிறைவு பெற்றால் தான் உயர்நிலைத் தேவைகள் எழும் என்றும் மாசுலோ கூறியுள்ளார். தன்னுடைய திறமைகளுக்கு ஏற்பத் தன்னிறைவு

பெறுபவன் ஆளுமைச் சமநிலை அடைகிறான். இத்தகைய ஆளுமை பெற்றவனிடம் இயல்பான படைப்பாற்றல் மிக்க நடத்தை காணப்படும் என்று கருதுகிறார்.

சிலநேரங்களில் மனிதர்கள் தம் உடல்சார் தேவைகளைப் புறக்கணித்து விட்டுச் சுயநலனுக்காகவோ, வேறு சிலவற்றுக்காகவோ உணவு, உயிர் ஆகியவைகளைத் தியாகம் செயகின்றனர். சமூகநலன் என்பது உயர்மட்டத் தேவைகளைப் புறக்கணிக்கத் தூண்டுகிறது. பெரும்பாலானவர்களுக்குத் தம் உடல்சார் தேவைகள் நிறைவுபெறின் காப்புத் தேவைகள் எழுகின்றன. வாழ்க்கையில் நிலையான வருமானம், நல்ல உறுதியான இருப்பிடம், பகைவர்களிடமிருந்து பாதுகாப்பு ஆகியவை காப்புத் தேவைகள் ஆகும். மக்கள் புதிய முயற்சிகளை மேற்கொள்வதிலும் தயக்கம் அடைவது காப்புணர்வின்மை பற்றிய அச்சம் அவர்களின் மனதில் தோன்றுவதால் தான் என்று மாசுலோ கூறுகிறார்.

### 3.4.7 எரிக்எரிக்சன் (Erik Erikson 1902-1994)

தனிமனிதனுடைய தேவைகளுக்கும் சமூகத்தின் எதிர்பார்ப்புகளுக்குமிடையே எழும் தொடர்பு ஆளுமை வளர்ச்சியின் அடிப்படையாக அமையும் என்று எரிக்சன் கூறுகிறார். இவர் தனிமனிதனின் சமூக வளர்ச்சி அவன் வாழ்நாள்முழுவதும் பரவி இருப்பதாகவும் விளக்கியுள்ளார்.

குழந்தையின் ஒவ்வொரு வளர்ச்சியிலும் ஏற்படக் கூடிய இயல்பு தன்முனைப்பு வளர்ச்சியாகும். இயல்பு பிறழ்ந்த தன்முனைப்பு வளர்ச்சி பற்றியும், அது ஆளுமை வளர்ச்சிக்கு எவ்வாறு அடிகோலுகிறது என்பதையும் விரிவாக எடுத்துரைத்துள்ளார். மேலும் தனி மனிதனது ஆளுமை சமூகத்துடன் ஒட்டி அமைகிறது என்றும், வாழ்க்கையின் பல நிலைகளில் தனிமனிதன் புரியக் கூடிய சாதனைகளையும் அவனிடம் காணப்படும் சிறப்பு இயல்புகளையும் எடுத்துரைத்துள்ளார் எரிக்சன்.

### 3.4.8 காரன் ஆர்னை (Karen Horney 1885- 1952)

மெய்ந்நிலைத் தன்னுணர்வுக்கும், கற்பனையில் மேம்பாட்டு நிலைக்கு உயர்த்தப்படும் தன் உணர்வுக்கும் இடையில் காணப்படும் வேற்றுமைகளை முதன் முதலில் எடுத்துரைத்த உளவியலார் இவரேயாவார்.

ஒருவன் தன்னைப் பற்றிக் கொண்டுள்ள உள உருவம் அவனுடைய உண்மையான உள உருவத்தைக் காட்டிலும் வேறுபட்டதாக இருக்கலாம். இந்த வேறுபாட்டினை உணராதவர்கள் தம்முடைய தவறான தற்கருத்தினால் உண்மையான உள உருவத்திற்கும் இன்னல் விளைவிக்கின்றனர். இந்த முரண்பாடே உளக்கோளாறுகளுக்கும் காரணமாக அமைந்துள்ளது.

உளப்பகுப்பாய்வு மனிதனின் ஆளுமையை வெளிப்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. உளக்கோளாறு மூலம் வெளிப்படும் நடத்தை, பாலுணர்வு உள் உந்துதல் மூலம் வெளிப்படும் நடத்தை,குழந்தைப் பருவம் முதல் முதுமைப் பருவம் வரை சமூகத்தால் ஏற்படும் தாக்கங்கள் போன்றவை மூலம் உடல் சார்தேவைகள் பூர்த்தி செய்யப்படுகிறது என்பனவற்றை உளப்பகுப்பாய்வின் மூலம் அறியமுடிகிறது.

ஆளுமை என்பது மனித உள்ளத்தோடு பெரிதும் தொடர்புடையது. உளப்பகுப்பாய்வறிஞர்களின் ஆளுமை பற்றிய இந்தக் கருத்துகள் வரையறைகள் இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

மனித வாழ்வின் அடிப்படை ஆதாரங்களில் ஒன்று ஆளுமையாகும். ஆளுமையின் முக்கியத்துவம் உணரப்பட்ட நிலையில் உளவியல் அறிஞர் பலரும் தங்களுக்கே உரிய தனித்த ஆளுமைக் கோட்பாடுகளை உருவாக்கிச் சென்று உள்ளனர். அக்கோட்பாடுகள் மூலம் மனிதர்களின் பொதுவான ஆளுமைக் கூறுகளையும் அவர்கள் வரையறுத்துச் சென்றுள்ளனர். அத்தகைய ஆளுமைக் கோட்பாடுகள் என்னென்ன என்பது சுருக்கமாக பின்வருமாறு விளக்கப்படுகின்றன. இக்கோட்பாடுகளை அறியும் பொழுதுதான் மனிதரின் பொதுவான ஆளுமைப்

பண்புக்கூறுகள், ஆளுமைக்காரணிகள், ஆளுமையைக் கண்டறியும் வழிமுறைகள் எவை எவை என்பது விளங்கும்.

### 3.5 ஆளுமைக் கோட்பாடுகள்

ஆளுமைக் கோட்பாடு என்றால் என்ன என்பது பற்றி மார்கன் என்பார் கீழ்வருமாறு கூறுகிறார். "சமூகச் சார்புடைய ஒவ்வொரு மனிதனின் நடத்தையைக் கவனிக்கும் பொருட்டு அவனது ஆளுமைத் தன்மையை விளக்க முடியும் இக்கருத்தினை விளக்குவதே ஆளுமைக் கோட்பாடாகும். இக்கோட்பாடு யூகங்களின் அடிப்படையிலே வகுக்கப்பட்டுள்ளது. இவை தரவுகளின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டால் உண்மைத் தன்மை பெறும்.ஆனால் இதுவே முடிந்த முடிவல்ல. இது மாற்றத்திற்கு உட்பட்டதாகவும் அமையும்."[13]

ஆளுமை பற்றிய ஆராய்ச்சிகள், அறிவியற் கருத்துகள் போன்றவற்றின் அடிப்படையில்ஆளுமை என்ற பண்பு ஒருவரிடம் வளர்ந்து ஊடாடி நிற்கும் நிறத்தினை விளக்குதலே ஆளுமைக் கோட்பாடுகள் ஆகும்.

ஆளுமைக் கோட்பாடுகள் ஆறுவகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை,

1. மனிதர்இனநல- இருத்தல் நிலைசார் கோட்பாடு (Humanistic- Esistential model)
2. வகையியல் கோட்பாடு (Typology model)
3. உளப்பகுப்புக்கோட்பாடு (Phychanallystic model)
4. சமூகத்தின் தன்முனைப்புக்கோட்பாடு (Ego- social model)
5. ஆளிடைக் கோட்பாடு (Inter personal model)
6. நடத்தைக் கோட்பாடு (Behaviouristic model)

#### 3.5.1 மனித இன நல இருத்தல் நிலைசார் கோட்பாடு

மனித இனநல இருத்தல் நிலைசார் கோட்பாட்டினை உருவாக்கி வளர்த்தவர்கள் ஆல்போர்ட், இரசார்ல், மாசுலோ, எரிக் ஃபிரேம் போன்றவர்கள் ஆவர்.

எரிக் ஃபிரேம் சமூகக் கருத்துக்களைக் கொண்ட உளப்பகுப்புக் கோட்பாடு என்று ஆளுமையை வரையறை செய்துள்ளார். இயற்கைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளச் சமூகம் எந்த அளவுக்கு உதவுகிறதோ அந்த அளவுக்கு அவன் நல்லவனாக இருக்கிறான். ஆனால் மனிதனிடம் மனித இயல்போடு விலங்கு இயல்பும் கலந்து உள்ளது என்றும் அவர் குறிப்பிடுகிறார். இயற்கையோடு இயைதல், விலங்கு நிலையிலிருந்து மேல் எழுதல், புதியன படைக்கும் ஆக்கத்திறன் தனித்தன்மையைப் பேணுதல், தன்னையும உலகத்தையும் அறிந்து கொள்ளுதல் போன்ற மனிதத் தேவைகள் சமூகத்தால் நிறைவு செய்யப்படுவதால் ஒரு மனிதனுடைய ஆளுமைக்கும் சமூகத்திற்கும் தொடர்பு உள்ளது என்று கூறுகிறார்.

மனிதனின் இயல்புகள், அம்மனிதனின் வாழ்வில் ஏற்படு சிக்கல்கள் போன்றவற்றை ஆராய்வது இக்கோட்பாடாகும் மனிதனின் பண்பாடு, அவன்சார்ந்த சமூகம் இவ்விரண்டுமே மனித நடத்தையையே உருவாக்குகின்றன என்று இக்கோட்பாடு கூறுகிறது. இக்கோட்பாட்டின்படி, ஒவ்வொரு மனிதனின் குழந்தைப் பருவம் தொடங்கி அவனுடைய வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்களும் ஆளுமையில் மிகச்சிறப்பான பங்கு வகிக்கின்றன என்று ஆல்போர்ட் கூறுகிறார்.

### 3.5.2 வகையியல் கோட்பாடு

யுங் வகையியல் கோட்பாட்டில் மனிதன் சமூகத்தின் மீது கொள்ளும் ஈடுபாடு, பங்களிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அகமுக வகையினர்,புறமுக வகையினர் என்று இருவகைஆளுமைகளைக் கூறுகிறார்.

மக்களை ஆளுமையின் அடிப்படையில் பலவகை மாதிரிகளாகப் பகுத்து விளக்குவது வகையியல் கோட்பாட்டாளர்களின் பணியாக அமைந்தது ஐசங், யுங், கிரேட்சிம்மர், செல்டன், இல்பராசோ, இப்பாக்கிரேட்டஸ் போன்றோர் வகையியல் கோட்பாட்டாளர்களுள் அடங்குவர். இவர்களுள் 'ஐசங்' ஆளுமையில் ஒவ்வொரு வகையிலும் ஓர் அடுக்கு இருப்பதாகக் குறிப்பிடுகிறார். அந்த அடுக்கில்

உளக்கோளாறு. நிலைத்தன்மை, அகமுகம், உளப்பிணி, புறமுகம் ஆகிய ஆளுமை வகைகள் ஒவ்வொன்றிலும் வேறுபல பண்புக் கூறுகள் அடங்கியுள்ளன என்றும் இவர் கூறுகிறார். கிரேட் சிம்மர், செல்டன்,இலம்பரசோ, இப்பாகிரட்டிஸ் ஆகியோர் ஆளுமையை உடலியல் கூறுகளின் அடிப்படையில் பாகுபடுத்திக் கூறுவோர் ஆவர்.

### 3.5.3 உளப்பகுப்புக்கோட்பாடு

ஆளுமை பற்றி விளக்கும் கோட்பாடுகளில் முக்கியமான ஒன்று உளப்பகுப்புக்கோட்பாடு ஆகும். உளவியல் கோட்பாடு அடிப்படையில் பல்வேறு அறிஞர்கள் கூறிய கருத்துகள் முன்னரே விளக்கப்பட்டுள்ளன.

### 3.5.4 சமூகத் தன்முனைப்புக்கோட்பாடு

ஃபிராய்டின் ஆளுமை பற்றிய கருத்தாக்கங்களை ஏற்றுக் கொண்ட எரிக் எரிக்சன் மனித ஆளுமையைச் சமூகத் தன்முனைப்புக்கோட்பாட்டின் அடிப்படையில் விளக்கியுள்ளார். எரிக் எரிக்சன், "உளவளர்ச்சிநிலைகள் ஃபிராய்டு கூறியதைப் போலப் பால் உந்துதலின் அடிப்படையில் அமையவில்லை. அதற்கு மாறாக உளச் சமூகக் காரணிகள் அடிப்படையில் உருவாகிறது," என்று கருதினார்.

எரிக்சன், "ஒரு மனிதனின் ஆளுமை என்பது கமூகக்காரணிகளால் உருவாகிறது," என்று கூறுகிறார்.சமூக நிறுவனத்திடம் மனிதன் கொள்ளும் பங்களிப்புக்கேற்ப அவனது ஆளுமை அமையும் என்பார். அந்தப் பங்களிப்பில் எழும் நெருக்கடிகள், இருவேறுபட்ட இயல்புகளுக்கு இடையேயான போராட்டமாக உருவாகிறது. அது நம்பிக்கை, அவநம்பிக்கை, தனித்து இயங்கும் நிலை, வெட்கம், சந்தேகம், ஊக்க உணர்வு, குற்றஉணர்வு, ஊக்க முயற்சிகள், தாழ்வு மனச்சிக்கல், அடையாளம் காணுதலில் வெற்றி,குழப்பம், நெருக்க உணர்வு,தனிமை படைப்பாக்க உணர்வு, தேக்கநிலை,நேர்மை, நம்பிக்கையின்மை என்னும் குணங்களாக மாறுகிறது. அவர் கூற்றுப்படிக் குழந்தைப்பருவத்தில் பெற்றோர், மற்றுமுள்ளோர் குழந்தையின் தேவையை நிறைவு செய்தல் வேண்டும், தேவைகள் நிறைவேற்றப்படாத நிலையில்,

அக்குழந்தை அவநம்பிக்கையைப் பெறுகிறது. பெற்றோரின் அன்பைப் பெற்ற குழந்தை சுதந்திர மனப்பான்மையையும் பெற்றோரின் அன்பைப்பெறாத குழந்தை அவமானத்தையும் அடைகிறது.

குழந்தை தன் விளையாட்டுப் பருவத்தில் தாயின் அன்பைத் தன்னிடம் மடைமாற்றிக் கொள்ளப் பெருமுயற்சி செய்கிறது. அம்முயற்சியில் வெற்றி பெறாத குழந்தை குற்றவுணர்வு கொண்டதாகிறது. குழந்தை பெற்றோரை விட்டுப்பிரிந்து, புற உலகைக் காணும் நிலையில் புற உலகத்தின் அங்கீகாரத்தை விரும்புகிறது. இம்முயற்சியில் வெற்றி பெற்றால் அக்குழந்தைக்கு ஊக்கமனப்பான்மையும், தோல்வியுற்றால் தாழ்வு மனப்பான்மையும் தோன்றுகின்றன.

இளமைப்பருவத்தில் சமூக அங்கீகாரத்தை விரும்புகின்ற ஒருவர் வெற்றி பெற்றால் சமூகத்தோடு ஒன்றுவார். தோல்வியுற்றால் சமூகத்திற்கும் தனக்கும் இடையே உள்ள உறவால் ஒரு குழப்பநிலை அடைகின்றார். சமூகப்பெரும்பரப்பு தன்னைப் புறக்கணிக்காமல் இருப்பதற்குச் சிலர் சிறு குழு அமைப்புகளில் ஈடுபடுகின்றனர். அவ்வாறு ஈடுபட்டுத் தம்மை அடையாளப்படுத்திக்கொள்கின்றனர். இந்த அடையாளத்திலும் தோல்வி ஏற்படும் போது குழப்பநிலை அடைகின்றனர்.

வயது வந்தோர் பருவத்தின் முதல் நிலையில் தெளிவான சமூக உறவுகளை அடைவதில் ஒருவர் வெற்றிபெற்றால் சமூகநெருக்கத்தை அடைகிறார். தோல்வியுற்றால் மனஅழுத்தங்களின் விளைவாகச் சமூக ஒதுக்குதலுக்கு அவர் ஆளாகிறார். தனிமனிதனின் குறிப்பிடத்தக்க சாதனை என்பது மற்றவர்களுடன் மனநிறைவோடு சமூகத்தொடர்பு கொள்ளுதலே ஆகும்.

தனிமனிதன் தனக்குப் பின்வரும் தலைமுறையினருக்குப் பயன்படும்வகையில் ஆக்கச் செயல்களில் ஈடுபடும் முயற்சியில் வெற்றி பெற்றால் தன்னிறைவும், தோல்வியுற்றால் தேக்கநிலையும் அடைகிறான்.

மனிதவாழ்வின் இறுதிநிலையில் தன்முனைப்புச் சமநிலைக்கும் சோர்வுக்குமிடையே போராட்டம் ஏற்படுகிறது தன்வாழ்க்கையில் வெற்றி தோல்விகளுக்கு இடையில் தன் பங்கினைச் செய்து முடித்துவிட்டதாகக் கொள்ளும் உணர்வு ஏற்படுகிறது. எரிக் எரிக்சன் இவ்வாறு சமூகத் தன் முனைப்புக் கோட்பாடு அடிப்படையில் குழந்தைப்பருவம் முதல் அவனுடைய முதுமை வரை எட்டுப்படிநிலைகளை விளக்கி அவனுடைய வளர்ச்சிக்குச் சமூகத்தொடர்புதான் காரணம் என்று குறிப்பிடுகிறார்.

உளமருத்துவரான 'காரன் ஆர்னை' வாழ்வின் சூழ்நிலை அழுத்தங்கள். குழந்தையின் உள்ளத்தில் பதட்ட நிலையைத் தோற்றுவிக்கின்றன என்று கூறுகிறார்.

பெற்றோரின் கண்டிப்பு, அன்பில்லாமை, நசுக்கப்படுதல் போன்ற காரணங்கள் உளக்கோளாறின் தேவைகளாக மாறலாம். மாறாமலும் இருக்கலாம் என்று கூறுகிறார். இவற்றின் அடிப்படையில் மக்களிடம் நெருங்கும் தேவை மக்களுக்கும் எதிராகச் செயல்படும் தேவை, மக்களை விட்டுப் பிரியவைக்கும் தேவை என்று மூன்று தேவைகளை வகைப்படுத்துகின்றார். இவை தவிர மக்களிடம் சிறப்புத்தேவை, உளக்கோளாறுசார் ஆசை, இழப்பின் மீதான ஆசை ஆகிய மூன்று தேவைகளையும் கூறுகிறார்.

ஆல்பிரட் அட்லர், பாலுணர்வுச் சக்தி மனிதச் செயல்பாட்டின் மையம் என்பதை மறுத்து அதிகாரம் வகுக்கவும், முக்கியத்துவம் பெறவும் எல்லா மனிதர்களும் உந்தப்படுகிறார்கள். எல்லாரும் உயர்வைத் தேடுகிறார்கள். அதற்காகத் தனியே பாடுபடுகிறார்கள். இவையே ஒருவரின் வாழ்க்கை முறை என்று கூறுகிறார். ஒருவரின் வாழ்க்கை முறையைப் புரிந்து கொண்டால் அவர் எத்தகைய ஆளுமை கொண்டவர் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும் என்று கூறுகிறார்.

அட்லர், தனிமனிதனின் சமூக ஈடுபாடுகள், செயல்கள், நோக்கங்களை வைத்து மனிதனின் ஆளுமைத்திறனை ஆளும் வகை, அடையும் வகை, தவிர்த்தல்

வகை, இயல்பு வகை என நான்காகப் பிரிக்கிறார். இவ்வகைகள் மூலம் ஒரு தனிமனிதன் சமுதாயத்தின் இலக்குகளை அடைவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுகிறான். அம்முயற்சிகளில் அவன் தன் நடத்தையை வெளிப்படுத்துகிறான் என்று கூறுகிறார்.

### 3.5.5 ஆளிடைக் கோட்பாடு

எரிக்பெர்ன் இரு மனிதர்களுக்கு இடையே ஏற்படும் இடையுறவுகளின் இயல்புகளைப் பகுத்தாய்வது, இடையுரவுப் பகுப்பாய்வு என்று ஆளிடைக்கோட்பாட்டினைக் குறிப்பிட்டுள்ளார்.

### 3.5.6 நடத்தைக் கோட்பாடு

தனிமனிதனின் சூழ்நிலைத் தூண்டலுக்கு ஏற்ப அவனுடைய ஆளுமை அமைகிறது. ஆளுமைப் பண்புகள் நிலையாக அமைவதில்லை. அவை குறிப்பிட்ட தூண்டலுக்கு ஏற்ப அமைகின்றன என்ற அடிப்படைக் கருத்துகளைக் கொண்டது நடத்தைக் கோட்பாடாகும். ஒரு மனிதனுடைய இயல்பு, பாராம்பரிய இயல்பு, அனுபவத்தால் ஈட்டிய இயல்பு போன்றவை சேர்ந்து அமைவதே ஆளுமையாகும். இவ்ஆளுமைக்கோட்பாட்டை முதன்மையாக முன்மொழிந்தவர்களாக ஜான்வாட்சன், அண்டர், இலாசுலே, கத்ரி, கோல்ட்டு, அல் முதவியவர்களைக் குறிப்பிடலாம்.

மனிதனின் வெளிப்படையான நடத்தையை ஆராய்ந்து அவனுடைய ஆளுமையை அறியலாம் என்பதே நடத்தைக் கொள்கையாகும். மனித நடத்தை மூன்று வகைப்படும். அவை,

1. இயக்க நடத்தை,
2. குரல் நாண்களின் அசைவுகள்,
3. உள் உறுப்புகளின் இயக்கத்தினின்றும் எழும் நடத்தைகளாகும்.

நடத்தைக் கோட்பாட்டை முதன் முதலில் தொடங்கியவர் ஜான்வாட்சன் ஆவார்.உள்ளத்தின் செயல்கள் உடல் இயக்கங்களின் விளைவாக ஏற்டுகின்றன.

தூண்டல், துலங்கல் தொடர்புகளால் ஏற்படும் மறுவினைகளே நடத்தையின் அடிப்படை என்று இவர் கூறுகிறார்.

மனித வாழ்வின் பல்வேறு நிலைகளில் மனிதனின் நடத்தைகள் மாறுபடுகின்றன. இத்தகைய நடத்தை மாற்றங்களை ஆராய்வது நடத்தையியல் கோட்பாட்டுக்குள் அடங்கும். இவ்வாறு ஆறுவகையான ஆளுமைக் கோட்பாடுகள் அறிஞர்களால் முன்னுரைக்கப்படுகின்றன.

### 3.6 ஆளுமையின் வகைகள்

உலகில் வாழுகின்ற மாந்தர் அனைவரையும் அவர்களின் ஆளுமையின் இயல்புப்படி குறிப்பிட்ட சில வகைகளாக உளவியல் அறிஞர்கள் பிரிக்கின்றனர். ஆளுமையின் வகைகள் அனைத்தும ஒருங்கே அமையும்படி யுங் என்பவர் இருவகைப்பட்ட ஆளுமைகளைப் பரித்துள்ளார். அவை

1. அகவயப்பட்டவர்கள்
2. புறவயப்பட்டவர்கள்

### 3.6.1 அகவயப்பட்டவர்கள்

அகவயப்பட்டவர்கள், "புற உலக நிகழ்ச்சிகளில் ஈடுபடாமல் எப்போதும் தம்மைப் பற்றிய சிந்தனை, கற்பனை, நினைவுகள் கொண்டு தம்முடைய மனவெழுச்சிகளைப் பிறருக்குக் காட்டமாட்டார்கள். சிறு தோல்வியையும் தாங்கிக் கொள்ளும் மனப்பான்மை அற்றவர்களாக இருப்பார்கள்."[14]

வெளி உலக மக்கள் பொருட்கள் மீது பயன்கருதியே செயல்படுவார்கள். அகமுகத்தினர் பிறருடன் சேராது ஒதுங்கியிருப்பதையும், தனிமையில் இருப்பதையும் விரும்பும் தன்மையினராவர். அவர்கள் மற்றவருடன் இணக்கமாக இல்லாமல் விலகியும் தனித்தும் இருக்கும் விருப்பமுடையவர் ஆவர். பகல் கனவு காண்பவராகவும், தாழ்வு மனப்பான்மையினராகவும் அவதிக்குள்ளாகுபவராகவும் அகமுகப்பட்டவர்கள் இருக்கின்றனர். அகமுகப்பட்ட ஒரு மனிதர் மிகுந்த

கூச்சமுடையவராகவும், பின்வாங்கும் தன்மையினராகவும் காணப்படுகிறார். அவர் சமூகச் சார்புடைய தனியாள் அல்லர். மற்றவர்களோடு கலந்து பழகுபவருமல்லர். அவருக்குத் தனது சொந்த உலகத்தில் தான் ஈடுபாடு இருக்கும். கோலன் எனும் அறிஞர் மேலும் அகவயப்பட்ட ஆளுமையினரின் உட்பிரிவாக மூன்று வகை மனப்பான்மைகளை விளக்கியுள்ளார். அவை சிடுமூஞ்சி மனப்பான்மை, தூங்குமூஞ்சி மனப்பான்மை நகைமுக மனப்பான்மை என்பனவாகும். வில்லியம் ஜேம்ஸ் மனித குலத்தை இரு வகைகளாகப் பிரித்தார். ”கடின உள்ளம் உடையோர், மென்மையுள்ளம் படைத்தவர் என்பது அவ்விருவகைகளாகும்.”[15]

### 3.6.2 புறவயப்பட்டவர்கள்

இவர்கள் கூடிவாழும் தன்மையுடையவர்கள் நட்புக் கொள்வதை அதிகம் விரும்புபவராக இருக்கிறார்கள். பிறரிடம் காணும் குற்றங்களைக் கண்டு கொள்ளாமல், ஒளிவு மறைவு இல்லாமல் இருப்பார்கள். சமூகச் செயல்பாடுகளில் அதிக அக்கறை கொண்டவராக இருப்பார்கள். தனிமையை விரும்பமாட்டார்கள். சமூக அங்கீகாரத்தை பெரிதும் விரும்பும் குணமுடையவராகவோ, வெளிஉலகத்தில் அதிகம் விரும்பப்படுபவராகவோ இருப்பார்கள். தோல்வியைத் தாங்கும் பக்குவமுடையவராகவும் இருப்பார்கள். இதனை வாழ்வியற் களஞ்சியம், “புறவயப்பட்டவனோ தன்னாய்வுத்திறன், ஒளிவுமறைவு இல்லாமை, பிறர்காணும் குற்றங்களைப் பொருட்படுத்தாமை போன்ற இயல்புகளைப் பெற்றிருப்பான்”[16] என்று விளக்கியுள்ளது.

மேலும், “புறவயப்பட்டவர்களின் ஆளுமையின் உட்பிரிவாக ஸ்பேரன்கர் ஆறுவிதமாகப் பாகுபாடு செய்கின்றார் அவை 1. கொள்கை வகை ஆளுமை 2. அழகுணர்ச்சி ஆளுமை 3. சமூக வகை ஆளுமை, 4.பொருளாதார வகை ஆளுமை 5. அரசியல் ஆளுமை 6. சமய ஆளுமை ஆகியவை ஆகும்”[17].

### 3.6.3 அகமும் புறமும் ஒருங்கே அமைந்த ஆளுமை

அகவயப்பட்டவர்கள், புறவயப்பட்டவர்கள் ஆகிய ஆளுமை வகையினை ஒருங்கே பெற்ற சில ஆளுமை வகைகள் விவரிக்கப்படுகின்றன. அவை,

1. கருத்துத்திரிவு ஆளுமை (Paranoid Personality)
2. உளச்சிதைவு ஆளுமை (Schizoid personality)
3. தவிர்ப்பு ஆளுமை (Avoidance personality)
4. வரம்பு ஆளுமை (Borderline personality)
5. நடிப்பு ஆளுமை (Histrionic personality)
6. தன்வழிபாட்டு ஆளுமை (Narcissistic)
7. சார்புநிலை ஆளுமை (Dependent)
8. கட்டாய ஆளுமை (Compulsive)
9. பணிவுத்தாக்குதல் ஆளுமை (passive aggressive)
10. சமூக எதிர்ப்பு ஆளுமை

ஆகியவை ஆகும்.

#### 3.6.3.1 கருத்துத் திரிபு ஆளுமை

கருத்துத்திரிபு ஆளுமையினரிடம் கருத்துத்திரிபு உளநோயாளிகளைப்போல் திரிபுணர்வுகளோ, மனநோய் அறிகுறிகளோ காணப்படுவதில்லை. ஆனால் இவர்களிடம் பரவலான ஒரு சந்தேக மனப்பான்மையும் மற்றவர்களிடம் நம்பிக்கையின்மையும் அதிக அளவில் காணப்படும். சிறு செயல்களில் மிகுந்த கவனம் செலுத்துவர் மற்றவர்கள் தம்மீது குற்றம் கண்டுபிடிப்பதை வெறுப்பார்கள். மிகுந்த மனவேதனைகளையும் துன்பங்களையும் அனுபவிப்பர். தம் குடும்பத்தினர் தமக்கு எதிராகச் சதி ஆலோசனை செய்கின்றனர் என்று குற்றம் சாற்றுபவர், இவ்வகை ஆளுமையினர் ஆவர்.

### 3.6.3.2 உளச்சிதைவு ஆளுமை

இவ்வகை ஆளுமை உடையவர்கள் தனிமையில் இருப்பதை விரும்புபவர்கள் சமூக உறவுகளை மதிக்காதவர்கள். இரக்க குணம் அற்றவர்கள் வஞ்சனை உள்ளவர்கள். புகழுக்கு அடிமை ஆகமாட்டார்கள். தனிமையில் இருப்பதால் சில சாதனைகளை நிகழ்த்துவார்கள். இவ்வாறு காணப்படுபவர்களை உளச்சிதைவு ஆளுமையினர் என்பார்கள்.

### 3.6.3.3 தவிர்ப்பு ஆளுமை

தவிர்ப்பு ஆளுமையினர் பிறரால் ஏற்படுத்தப்படும் அவமானத்தைத் தாங்கிக் கொள்ளாதவர்கள். அதனால் அவமானம் நேராவண்ணம் நடந்துகொள்வார்கள். அவர்கள் தம் செயல்பாடுகளை குறைவாக எண்ணுவார்கள். மற்றவர்களை விரும்புவார்கள். அம்மற்றவர்கள் தங்களை ஏற்றுக்கொள்வார்களோ, ஏற்றுக்கொள்ளமாட்டார்களோ என்று ஐயப்பாடு கொள்ளும் தாழ்வு மனப்பான்மை கொள்ளுவார்கள்.

### 3.6.3.4 வரம்பு ஆளுமை

வரம்பு ஆளுமை உடையோரின் மனநிலை அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கும். சிலசமயம் அன்பாக இருப்பார்கள். மறுகணமே கோபப்படுவார்கள். அடங்காக் கோபமும் இவர்களிடம் காணப்படும். தனிமையை வெறுப்பார்கள் தம்மை பற்றியே அதிகக் கவலை கொள்ளுவார்கள்.

### 3.6.3.5 நடிப்பு ஆளுமை

இவர்கள் மற்றவர்களுடன் சேர்ந்தே இருப்பார்கள். ஆனால் அவர்கள் மற்றவர்களின் துன்பங்களைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். தம் மகிழ்ச்சியைப் பெருமையாகக் கொள்வர் இவர்கள் எளிதில் நட்பு கொள்ளும் சுபாவமுடையவர் ஆவர். மற்றவரின் கவனத்தை ஈர்ப்பதற்காகத் தன்னுடைய நடத்தையை மாற்றிக் கொள்வர். ஆண்களைவிடப் பெண்களிடமே இத்தகை ஆளுமை காணப்படும்.

### 3.6.3.6 தன்வழிபாட்டு ஆளுமை

இவர்கள், தன்னம்பிக்கை கொண்டவர்கள். தன் முன்னேற்றம் பற்றி கற்பனையில் அதிகம் ஆழ்ந்து இருப்பார்கள். தன்னையே அதிகம் நேசிக்கும் பண்புடையவர்கள். இவர்கள் எப்பொழுதும் தம்மைப் பற்றிய புகழ் உரைக்கு அடிமைப்பட்டவர்கள். மற்றவர்களின் உணர்ச்சிகளையும், இன்ப துன்பங்களையும், விருப்பு வெறுப்புகளையும் இவர்கள் கண்டு கொள்ள மாட்டார்கள்.

### 3.6.3.7 சார்புநிலை ஆளுமை

இவர்கள், தம்முடைய பொறுப்புகளை மற்றவர்கள் மீது சுமத்துபவர்கள். இதற்குக் காரணம், இவர்களுக்குத் தன்னம்பிக்கை இல்லாமையாகும். தமக்காக உதவி செய்தவர்களைத் தம்முடனே வைத்துக் கொள்வார்கள். அதனால் எளிதான முடிவுகளைக்கூடத் தம்மிடம் உள்ளவர்களிடம் கேட்டே முடிவே செய்வார்கள். பல இன்னல்களுக்கு இடையிலும் தம்மிடம் உள்ளவர்களிடம் பிரியாமல் சார்ந்தே இருப்பார்கள்.

### 3.6.3.8 கட்டாய ஆளுமை

இவர்கள் கருமமே கண்ணாக இருப்பார். நகைச்சுவை உணர்வு சிறிதும் இல்லாதவராக இருப்பர். இவர்கள் தாம் எடுத்துக்கொண்ட வேலையின் நோக்கத்தை மறந்துவிடுவார்கள். தம் செயலில் அதிகப் பிடிவாதம் காட்டுவார்கள். இவர்கள் செய்கின்ற பணியைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பதற்குத் தடைகளிருக்கும். இவர்கள் செய்யக்கூடிய எச்செயல்களிலும் நிறைவை எதிர்பார்ப்பவர்கள்.

### 3.6.3.9 பணிவுத் தாக்குதல் ஆளுமை

இவர்கள் திறமையின்மை,உறுதியின்மை, வேலையில் மறதி, பிடிவாதம் போன்றவற்றின் மூலம் பணிவு, திருப்தியின்மையை வெளிப்படுத்துவார்கள். இதற்குக் காரணம் தமக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்கப் பெறாமையே ஆகும். மற்றவர்கள் தம்மிடம் மிகுதியாக எதிர்பார்ப்பதாக இவர்கள் உணர்வார்கள்.

### 3.6.3.10 சமூக எதிர்ப்பு ஆளுமை

குழந்தைப் பருவத்தில் காணப்படும் பொய்கூறல், பள்ளி செல்லாமை, திருடுதல் போன்ற நடத்தைக் கூறுகள், வயது வந்தோர் பருவத்திலும் காணப்படின், இவை தனிமனிதனிடம் சமூக எதிர்ப்புக் கூறுகளாகின்றன. இதற்குப் பரம்பரையும் ஒரு காரணமாக அமைகின்றது.

## 3.7 ஆளுமைப்பண்புக் கூறுகள்

ஆளுமை பற்றிய அறிஞர்களின் சிந்தனைகள், ஆளுமைக்கோட்பாடுகள் பலவற்றை உருவாக்கித் தந்திருக்கின்றன. அந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஆளுமை வகைகள் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. பல்வேறு வகை ஆளுமைகளிலிருந்து பெறப்படும் ஆளுமைப் பண்புக்கூறுகளும், வரையறை செய்யப்பட்டு உளவியல் அறிஞர்களால் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளன.

ஆளுமை என்பது சிறப்பானது; குறிப்பிடத்தக்கது; தனித்தன்மை வாய்ந்தது. ஒவ்வொரு தனிமனிதனும் தன்னிலேயே சிறப்புத்தன்மை கொண்டவன். சூழலுக்கு ஏற்பத் தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளுவதற்கு ஏதுவான சில பண்புகள் அவனிடம் உள்ளன.

ஒருதனிநபரின் சிறப்புத்தன்மை என்பது மற்ற நபர்களின் ஆளுமைத் தன்மைகள்,பண்புகள் ஆகியவற்றோடு தொடர்பு கொண்டிருக்கும். அவர்களோடு அப்பண்புகளைப் பரிமாற்றம் செய்வதற்கு ஆளுமை ஒரு நபரைத் தயார் செய்கிறது. பல நபர்கள் ஒரே வகையான ஆளுமைக் கூறுகளைக் கொண்டிருந்தாலும். சில பண்புக்கூறுகள் அவர்களுக்கே உரியதாக வரையறை செய்யப்பட்டுள்ளன.

"ஒருவன் பெற்றுள்ள உடல் பண்புகள், மனப்பண்புகள், ஆன்மீகப் பண்புகள், அவன் வளர்த்துக்கொள்ளும் பழக்கவழங்கங்கள், மனப்பான்மைகள், அறநெறிப் பண்புகள் ஆகியவற்றின் விளைவாக உருவாகும் கலவைக்கு ஆளுமை என்று பெயர்"[18].

ஆளுமை என்பது ஒருவரை அடையாளப்படுத்துவது. ஒரு மனிதனின் சிந்தனை, செயல். எண்ணம், மொழி, மனம், ஒழுக்கம், சமூக உறவு போன்றவற்றின் மூலம் ஒருவனுடைய ஆளுமைப் பண்பைக் கண்டறிய முடியும்.

ஆளுமை என்பதனைப் புறத்தே காண்பதன் மூலமோ, வெறும் தோற்றத்தின் மூலமோ அளவிட முடியாது. அது ஒரு மனிதனைப் பற்றிய எல்லாவற்றையும் தன்னகத்தே உள்ளடக்குவதாக அமையும்.ஆளுமை என்பது எல்லாவகையான நடவடிக்கைகள், செயல்பாடுகள் அனைத்தையும் உள்ளடக்கிய மனவெளி மட்டுமன்று. நனவு மனம், நனவிலி மனம், ஆழ்மனம் ஆகியவற்றையும் உள்ளடக்குவதாக அமைகிறது.

"குடும்பச்சூழல், சமூகச்சூழல், அச்சூழலில் எழும் சமூகத்தூண்டல் போன்றவற்றின் இணைவினால் எழும் சிறப்புக்கூறுகளே ஆளுமை என்பதை அடிப்படைக் கருத்தாகக் கொள்ளலாம்".[19]

உடல், உளவியல் மண்டலங்களும், நடத்தையியல் கூறுகளும் ஒட்டு மொத்தமாகச் சேர்ந்து முனைப்பாகச் செயல்படும்போதுதான் ஆளுமை உருவாகிறது. ஒரு நபருடைய உடல்தோற்றம், அவருடைய உறவு கொள்ளும் தன்மை இவற்றை மட்டும் கொண்டு ஆளுமையை வரையறை செய்யவும் இயலாது. ஒரு நபரின் எல்லாப்பரிமாணங்களும் ஆய்வு செய்யப்படும் போதுதான் அவருடைய ஆளுமையை உணரமுடியும். மனிதர்களின் பண்புக்கூறுகளில் இருந்து பழக்கவழக்கம், நடத்தை, குடும்பச்சூழல், சமுதாயத்துடன் தான் கொள்ளும் உறவு, நட்பு, கோபம் இவற்றை அறியலாம். இப்பண்புக் கூறுகள், "அடிப்படைப் பண்புகள் என்றும் வழிநிலைப் பண்புகள் என்றும் இருவகைகளாக ஒவ்வொருவரிடமும் காணப்படுகின்றன[20]" என்று ஆல்போர் கூறுகிறார். ஒருவருடைய ஆளுமையும், பண்பும், சரிநிகர் சமமானது அல்ல. பண்பு என்பது அறிவியல் அடிப்படையில் அமைவது அது ஒரு நபரின் அறிவியல் மதிப்பீடாகும்.ஆளுமை என்பது ஓர் உளவியல் கருத்தாகும். ஆளுமை

என்பது பண்பு தவிர வேறு சில குணங்களையும் உள்ளடக்கியதாக அமைகிறது. இப்பண்பு ஒருவனைப் பிறர் விரும்பவோ வெறுக்கவோ செய்யும். ஆளுமை எனப்படுவது ஒருவனிடம் காணப்படும் உடற்கவர்ச்சியின் அளவு என்றும் பலர் எண்ணுகின்றனர். "பிறரைக்காட்டிலும் குறிப்பிட்ட ஒரு பண்பில் மிகச்சிறந்து விளங்குபவனைச் சிறந்த ஆளுமையுடையவன் என்கிறோம்."[21]

தனிமனிதனின் நடத்தை, ஒருமைப்பாடு ஆகியவை ஆளுமைக்கூறுகளாக உருவாகின்றன. மனிதன், உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றும் உடையவன் அவன் ஒரு "சமூகப் பிராணி" என்று அரிஸ்டாட்டில் கூறுகிறார். சமூக உறவுகளுக்கு மதிப்புக் கொடுத்து அவர்களுடன் ஒன்றி வாழ்வது,விருப்பு வெறுப்புகளைப் பொறுத்துக் கொள்வது, மற்றவர்களுக்குத் தொண்டு புரிவது ஆகியன சமூகப்பண்பாகும். அவ்வாறே, ஆன்மப் பண்புகளின் வளர்ச்சியும் முக்கியமானது. ஆன்மப் பண்புகளில், சகோதரத்துவம், பொறுமை, சகிப்பு மனம், வாக்கு செயல்களில் தூய்மை, தீங்கெண்ணாமை, இரக்கம், அன்பு, அருள், அறிவு தொண்டு, தியாகம் ஆகியவை அடங்கும்."[22]

ஒரு பண்புக்கூறு என்பது சிந்தனை, உணர்ச்சி, செயல் போன்றவற்றைப் பாரம்பரிய மரபு வழியாகக் கொண்டது அல்லது சூழலுக்கேற்ப முயன்று பெறப்பட்டது. இப்பண்புக்கூறுகள் சூழலுக்கு ஏற்ப மாறிக்கொண்டே இருக்கும். "ஒருவனைப் பிறரிடமிருந்து பிரித்து வேறுபடுத்திக்காட்டும் பண்பமைதிகளின் ஒட்டு மொத்தத் தொகுதி என்றும் குடும்பச்சூழல், சமூகச்சூழல், அச்சூழல்களில் எழும் சமூகத் தூண்டல்கள் முதலியவற்றின் ஒருங்கிணைந்த அமைப்பினால் ஒரு மனிதனிடம் எழும் சிறப்புக் கூறுகளே ஆளுமை"[23] என்று ஆல்போர்ட் ஆளுமைப் பண்பைப் பல்நிலைகளில் விளக்குகிறார்.

எனவே, ஒரு மனிதனிடம் வெளிப்படும் பண்புக்கூறுகள் பல, அப்பண்புக்கூறுகள் ஒன்றை ஒன்று சார்ந்தே இருக்கும். இதனால் ஒரு மனிதனிடம்

இயல்பான பண்புக்கூறுகள் இருந்தபோதிலும் அவனுள் சில இயல்பற்ற பண்புக்கூறுகளும் காணப்படும். இப்பண்புக்கூறுகள் ஒருவனிடம் எச்சூழலிலும் மாறக்கூடியதாகவும் இருக்கும்.

"கெட்டல்" எனும் அறிஞர், ஒருவனிடம் பன்னிரெண்டு ஆளுமைப் பண்புகள் அடிப்படையாக உள்ளன என்று கூறியுள்ளார். அவை பின்வருமாறு,

1. பரிவு - எதிர்ப்பு ( Genial Hostile)
2. நுண்ணறிவுள்ளவை - முட்டாள்தனம் (Intelligent- stepid)
3. மனவெழுச்சி முதிர்ச்சி - முதிர்ச்சியின்மை (Emotionalystable- Changeable)
4. உணர்ச்சியோடிருத்தல் - எதனையும் பொருட்படுத்தாமை (Sensitive- hard brided)
5. ஆதிக்கம்- பணிவு (Dominant- Submissive)
6. சிந்தனைத்திறன் மற்றும் அழகுணர்வு ஆற்றலோடு செயல்படல் பண்பாடின்மை (Creativity)
7. முழுமூச்சோடு செயற்படல்- முறையின்றி இயங்குதல் (Conscientious- sliphool)
8. ஒத்துழைத்தல் - ஒதுங்கிப்போதல் (Co-operative- Reversed)
9. உற்சாகம் - சோம்பல் (Vigorvous- slack)
10. உணர்வு மிகுதி- எதிலும் ஆர்வமின்மை (Emotional Uninterested- phlegmative)
11. நட்பு- சந்தேகம் (Friendly- suspicious)
12. மகிழ்வோடிருத்தல்- மகிழ்ச்சியின்மை (Cheerful- Unhappy)" [24]

மேற்சுட்டிய ஆளுமைப்பண்புகள் கொண்ட பலரைக் காண முடியும். இவ்வாளுமைப் பண்புகள் ஒவ்வொன்றும் ஒன்றை ஒன்று சார்ந்தே அமையும்.

எனவே மேலே சொல்லப்பட்ட ஆளுமைப் பண்புகளின் விளக்கங்களை நோக்கும் போது,

1. உலகத்தில் உள்ள மனிதன் ஒரு சமூக உயிரியாவான் இவன் அகத்தூண்டல்கள்,புறத்தூண்டல்கள் மூலம் ஆளுமைப் பண்புகளைப் பெறுகின்றான். இவ்வகைத் தூண்டல்கள் தாம், ஒருவன் தனது ஆளுமைப் பண்புகளை வெளிப்படுத்தவும் துணைபுரிகின்றன.

2. உடல், உள்ளம், சிந்தனை, செயல், அறிவு, நட்பு, தொண்டு, தியாகம் முதலியனவற்றின் மூலம் ஒருவனுடைய ஆளுமையை நாம் கண்டு கொள்ள முடியும்.

3. சமூகத்தூண்டல், பாரம்பரியம், சமூக உறவு, அறநெறி, புராணம், அனுபவம், உடற்கவர்ச்சி போன்றவை ஆளுமைப் பண்புகள் உருவாக்கத்திற்குக் காரணமாக அமைகின்றன.

4. கற்றல், அன்பு, கோபம், நம்பிக்கை, ஒழுக்கம், மகிழ்ச்சி, வெற்றி போன்றவை ஆளுமைப் பண்புகளாக வெளிப்படுகின்றன.

5. ஒரு சிலரிடத்தில் மரபு வழிப் பண்புக் கூறுகள் மாறாமல் அப்படியே இருக்கும் என்ற உண்மைகள் புலனாகின்றன.

எனவே ஒவ்வொரு மனிதனின் தன்னிலையும், சுற்றுப்புறநிலையும் ஆளுமைப் பண்புகள் உருவாக்கத்திற்குப் படிநிலை எனலாம்

### 3.8 ஆளுமைக்காரணிகள்

பல வகையான ஆளுமைப்பண்புக் கூறுகள் உருவாவதற்கு இரண்டு அடிப்படைக் காரணிகள் சுட்டப்படுகின்றன. அவை

1. மரபு நிலைக் காரணி
2. சூழ்நிலைக்காரணி

என்பவையாகும்.

மரபு நிலைக்காரணிகளும், சூழ்நிலைக்காரணிகளும் ஒன்றிலிருந்து ஒன்று சில வேறுபாடுகளைப் பெற்றுள்ள போதிலும் இவ்விரு காரணிகளும் ஒன்றை ஒன்று சார்ந்தே அமையப்பெறும். இது மனிதனின் வளர்ச்சிக்கும், நடத்தைக்கும் மிகவும் முக்கியமான ஒன்றாகும். இவ்விரு கூறுகளையும் கொண்டு ஒரு தனிமனிதனின் ஆளுமையை அளவிடமுடியும். "மரபு நிலை சில சமயங்களில் இயற்கை அல்லது உயிரியல்உரிமை என்றறியப்படுகிறது. சூழ்நிலை "பராமரிப்பு" என்றழைக்கவும் படுகிறது." [25]

இவ்விரண்டு காரணிகளில் மரபுநிலைக் காரணியே மனிதனின் வளர்ச்சிக்கும் முக்கியப் பங்காற்றுகிறது என்று கூறிவிட முடியாது. ஒருவனது உடல், தோற்றம், அவனது பண்பு, நடத்தை, ஒழுக்கம், பழக்க வழக்கம் முதலியவை மரபுநிலைக் காரணியைப் பொறுத்து அமைகின்றன. சூழ்நிலைக் காரணியோ குடும்பம்,சமூக உறவு, கற்றல், நட்பு, ஒழுக்கம் முதலியவற்றால் நிர்ணயிக்கப்படுகிறது. சூழ்நிலைக்காரணி மரபுநிலைக்காரணியை மாற்றும் தன்மை கொண்டது. என்னிடம் உடல்நலம் அமைந்த சில குழந்தைகளை ஒப்படையுங்கள். எத்தன்மை உடையவர்களாக அவர்கள் வளர வேண்டும் என்று முன் கூட்டியே கூறிவிடுங்கள். இக்குழந்தைகளின் மரபுநிலைப் பேரறிஞர்களாகவோ, பெருங்குற்றவாளிகளாகவோ அவர்கள் வளருமாறு செய்து காட்டுகிறேன்"[26] என்று வாட்சன் கூறும் கூற்று மிகப்பொருத்தமானதாகவே தோன்றுகிறது. ஒரு குழந்தை நல்லவனாவதும், தீயவனாவதும் பெற்றோர்களின் வளர்ப்பினாலேயே அமைகிறது. இங்குச் சூழ்நிலைக்காரணியே மேலோங்கி நிற்கிறது. எனவே மரபுக்காரணியும், சூழ்நிலைக்காரணியும் ஒன்றுடன் ஒன்று இணைந்த இருகோடுகளாகவே அமைகின்றன.

### 3.8.1 மரபுநிலைக்காரணிகள்

மரபுநிலைக்காரணி என்பது ஒருவனது குடும்பப் பாரம்பரியமான அவனது ஆளுமையை வெளிப்படுத்துவதாகும். குடும்பப் பாரம்பரியம் என்பது ஒரு குழந்தையின் உடல் கூறு, உளக்கூறு, மனவெழுச்சி போன்ற பண்புகளைக் கொண்டதாகும் இம்மரபுநிலையினை உயிரியில் மரபு என்று கூறலாம். ஒருவனது உடலமைப்பு அவனது மரபு நிலையைப் பொறுத்தே அமையும் "கிரேட்சிமர் இவ்வுடலமைப்பை மூன்று வகைகளாகப் பிரிக்கிறார் அவை, 1. விளையாட்டு உடல்வாகு 2.குறுகிய மெலிந்த உடல்வாகு 3. பருமனான உடல்வாகு என்பனவாகும். உடலமைப்பிற்குத் தக்கவாறு ஆளுமைப்பண்பு வெளிப்படும் என்றும் உளவியலாளர்கள் கருதுகின்றனர்".[27]

"கிரேட்சிமர், செஷல்டன் போன்ற அறிஞர்கள் விஞ்ஞான முறையில் ஆராய்ந்தனர். தடித்த, கொழுத்தவர்கள், உற்சாகம் உடையவராகவும் உடல் மெலிந்து இருப்பவர்கள் எப்பொழுதும் யோசனை, கவலையிலிருப்பவர் எனவும் ஆராய்ந்து கூறியுள்ளனர்".[28]

இம்மரபு நிலைக்காரணிகள் குழந்தை பிறந்த உடனே காணப்படுவதில்லை. அந்தக் குழந்தையின் வளர்ச்சிநிலையைப் பொறுத்தே ஆளுமைப்பண்பு அமைகிறது.

#### 3.8.1.1 கிரிகர் மெண்டல்

இதைப் போன்றே ஒத்த இயல்பினை உருவாக்குதல் என்னும் கோட்பாட்டை கிரிகர் மெண்டலின் எடுத்துரைத்தார். "பெற்றோர், குழந்தைகள் ஆகியோரிடம் மரபுநிலையின் விளைவாக காணப்படும் ஒற்றுமையைக் குறிப்பதாகும். ஆனால் மரபுநிலை இவர்களிடையே வேற்றுமைகளையும் சில நேரத்தில் தோற்றுவிக்கக்க கூடும் என்பதனை நாம் மறக்கலாகாது. சில மரபு நிலைப் பண்புகளைப் பெற்றோர்கள் தாம் வெளிப்படையாகக் கொண்டிராமல் தம்முள் தேக்கி வைத்திருப்பர். இப்பண்புகள் அவர்களுடைய குழந்தைகளிடத்தும் வெளிப்படையாகத் தோன்றக்கூடும். இதனால்

அவர்களது பெற்றோர்களிடத்தில் காண முடியாத பண்புகளில் சில குழந்தைகளிடத்தில் நம்மால் காணமுடிகிறது"[29] என விளக்குகிறார்.

பெற்றோர்களின் பண்புகளையே அக்குழந்தை வெளிப்படையாகக் காட்ட வேண்டுமென்பதில்லை. அவர்களின் பாரம்பரிய உறவுகளான தாத்தா, பாட்டி, அத்தை, மாமா, சித்தி, சித்தப்பா போன்றவர்களின் நடத்தைப் பண்புக்கூறுகளின் கலவையாகவும், அக்குழந்தையின் ஆளுமைப் பண்புகள் வெளிப்படும். மேலும் பெற்றோர்களின் பண்புகளை முழுமையாகக் குழந்தை பெற்றிருப்பதும், பெற்றோரின் தன்மைகளில் வேறுமுறையான பண்புகள் குறைந்திருந்தாலும்,தூரத்து முந்தையோரின் பண்புகளைப் பெற்றிருப்பதும் மரபுநிலைக்காரணி வகைக்குள் அடங்கும்.

### 3.8.2 சூழ்நிலைக் காரணிகள்

ஒரு மனிதனது வளர்ச்சி, நடத்தை, ஒழுக்கம், அனுபவம், நுண்ணறிவு, பழக்கவழக்கம், நட்பு, கோபம் முதலியவை அவனுக்குப் புறத்தே இருந்து அவனைக் கட்டுப்படுத்தவும், வழி நடத்தவும் செய்கின்ற காரணிகளாகும். இவை அவனது சூழ்நிலைக்கேற்றவாறே அமைகின்றன. அவை மனிதனுடைய வளர்ச்சியை ஊக்குவிப்பனவாகவும் அல்லது தடைப்படுத்துவனவாகவும் அமையும்.

எரிக் ஃபிரோம் என்னும் உளவியலாளர் "மனிதனின் ஆளுமை வளர்ச்சி, அவன் குடும்பத்தாருடன், பிற சமூக உறுப்பினர்களுடன் கொள்ளும் உறவு, அவ்வுறவு நிலைகளில் ஏற்படும் சிக்கல்கள், தடங்கல்கள் போன்ற காரணிகளால் பாதிக்கப்படுகிறது"[30] என்பார்.

மனிதனின் பிறப்பைத் தவிர்த்த அவனது இறப்புக்காலம் வரை மனிதனை மனிதனாக மாற்றுவதற்கு அவனுடைய குடும்பச்சூழ்நிலையே முக்கியப் பங்கு வகிக்கிறது. அச்சூழ்நிலைக்கேற்பவே அவனது நடத்தைக்கூறுகள்மாறுபட்டு அமையும். "இயற்கையிலேயே மனிதன் சமுதாய இயல்புடையவனாக உள்ளான் என

முதன்முதலில் வாதிட்டவர் அரிஸ்டாட்டில். பிறக்கும் போதே மனிதனின் இயல்புகள் சமுதாயத்தோடு ஒன்றுபடும் தன்மைகளைப் பெற்றுள்ளன என்றும், இத்தன்மைகள் மொழி, பழக்கவழக்கங்கள், அறிவார்ந்த முறையில் சிந்தித்தல் போன்றவற்றில் புதைந்து கிடக்கின்றன”[31] என்றும் கருதினார்.

மனிதன் சமுதாயத்தைச் சார்ந்தே வாழ்கிறான் அவ்வாறு சார்ந்து வாழ்வதால்தான் அவனுடைய அடிப்படைத் தேவைகளும் நிறைவேறுகின்றன. அவன் சமுதாயத்தைச் சாராமல் தனித்தவனாக அந்நியப்படும் போது அவனுடைய இயல்புத்தன்மைகளே முடக்கப்படுகின்றன. ஒரு மனிதனை ஆக்கவும், அழிக்கவும் செய்வது சூழ்நிலையே ஆகும்.

‘டிகண்டோல்’ எனும் புகழ்பெற்ற விஞ்ஞானி, "சுதந்திர பூமியில் சமாதான காலத்தில் அதிகமான திறன்வாய்ந்த மனிதர்கள் தோன்றுவர். அடிமை நாட்டில் திறன் வாய்ந்த மனிதர்கள் தோன்றுவது மிகவும் குறைவு[32]” என்கிறார் இதன் காரணம் சூழ்நிலையே என்று கூறுகிறார்.மேலும் அவர் ஆளுமை வளர்ச்சிக்கு சூழ்நிலையின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கும் போது, "ஆளுமையை நிர்ணயிப்பதில் சூழ்நிலையின் பங்கு மிக அவசியமாகிறது சூழ்நிலை என்னும்போது இயற்கைச் சூழ்நிலை, சமூகச்சூழ்நிலை, அறச்சூழ்நிலை, பண்பாட்டுச் சூழ்நிலை ஆகிய நான்கும் அடங்கும்”[33] என்று குறிப்பிட்டுள்ளார்.

### 3.8.2.1 இயற்கைச்சூழ்நிலை

காற்றோட்டம், வெளிச்சம், இருள், தட்பவெப்பநிலை, குடிநீர், நகரக் கிராம அமைப்பு முறைகள், உணவு, மழை போன்றவை இயற்கைச் சூழ்நிலைகளாகும்

### 3.8.2.2 சமூகச்சூழ்நிலை

மனிதன் கூடிவாழும் தன்மையுடையவன். எனவே சமூக நிறுவனங்கள் சார்ந்து அவனது நடத்தைகள் அமைகின்றன அச்சமூக நிறுவனங்கள் வீடு, பள்ளி,

நூல் நிலையம், கோவில், திரையரங்கு, செய்திநிலையம், அலுவலகங்கள், அங்காடி, பேருந்து நிலையம், இரயில் நிலையம், விளையாட்டு அரங்கம் போன்றவையாகும்.

#### 3.8.2.3 அறச்சூழ்நிலை

சமூக மக்கள் பின்பற்றுகின்ற நேர்மை, நியாயம், நீதி, ஈகை, கற்பு, உண்மை, நன்னடத்தை , தர்மம், கொடை போன்றவை அறச்சூழ்நிலைகளாகும்.

#### 3.8.2.4 பண்பாட்டுச்சூழ்நிலை

மனிதனின் உடை,உணவு, உறைவிடம், பழக்கவழக்கம், கலாச்சாரம், விருந்தோம்பல், சடங்கு, ஒருவனுக்கு ஒருத்தி போன்றவை பண்பாட்டுச் சூழ்நிலையை நிர்ணயிக்கின்றன.

மனித வளர்ச்சியில் மரபுநிலைக் காரணிகளும், சூழ்நிலைக் காரணிகளும் ஒன்றையொன்று சார்ந்தே இருப்பவை. இவ்விரண்டும் தனித்தனியே இயங்குபவை அல்ல. இவற்றில் எது சிறந்தது என்று ஆராய்ச்சியில் ஈடுபடுவது பொருத்தமற்றதாம். எனவே ஒரு மனிதனின் நடத்தையை இவ்விரு காரணிகளுமே நிர்ணயிக்கின்றன.

### 3.9 ஆளுமையை அளவிடும் முறைகள்

ஆளுமையை அளவீடு செய்வதற்குப் பலவகையான வழிமுறைகளும், சாதனங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. ஆளுமையை அளக்கவியலுமா என்பது ஒரு கேள்வியாக உள்ளது. அப்படி அளக்கும் முயற்சிகள் எத்தகைய சிக்கலுக்கு உள்ளாகின்றன என்பதும் விவாதத்திற்குரியதே. இருப்பினும் உளவியல் ஆய்வாளர்களும்,அறிஞர்களும், அறிவியல் கண்ணோட்டத்தையும், வழிமுறையையும் முன்மாதிரியாக வைத்துக்கொண்டு, ஆளுமையைக் கணக்கீடு செய்யவும், அளக்கவும் பல்வேறு உத்திகளையும் சாதனங்களையும் உருவாக்கி உள்ளார்கள். அதன் அடிப்படையில் ஆளுமையை அளவீடு செய்தல் பற்றி மூன்று வகையான வழி முறைகளை அறிஞர்கள் முன்மொழிந்தார்கள். அவை,

1. அகமதிப்பீட்டு முறை (Internal method)

2. புறமதிப்பீட்டு முறை (External method)

என்பனவாகும். இவை போன்ற வகைப்படுத்துதல்களும் பல்வேறு குறைகள் கொண்டதாகவே காணப்படுகின்றன. அகப்புற மதிப்பீட்டு முறை கொண்டு ஆளுமையை முறையாகப் பாகுபாடு செய்ய இயலாது. அளவையாளர்களின் உணர்வுகள், முனைப்புகள் இவற்றை அளவைச் செயல்பாட்டில் இருந்து வேறுபடுத்த முடியாது. எனவே ஆளுமையை அளப்பதில் சிக்கல்கள் அதிகம் என்பது தெரிகிறது. இதனை, "ஒரு குறிப்பிட்டதனித்தவர் பொருத்தப்பாட்டில் ஏதாவது கடினம் நேரும்போது அவர் மனநல மருத்துவரிடமோ உளவியல் வல்லுநரிடமோ போகும் பட்சத்தில் அந்தத்தனி ஆளின் ஆளுமையை அளவிடுவது அவசியமாகிறது. அதற்குப் பல ஆளுமைச் சோதனைகள் உள்ளன. சில சோதனைகள் தன்னைப் பற்றியன. சில புறத்தேற்று நுண்முறைகள் தனித்தவர் தன்னையே மதிப்பிடுவதிலும் வினாவிடைகளைக் கொண்டு மற்றவர்கள் மதிப்பிடுவதும் ஆகும்".[34.] என்று உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.இவர்கூறும் ஆளுமை அளவிடுமுறைகள்,

1. நேரடிக் காட்சி முறை (Observation)

2. சூழல் சார்ந்த சோதனை (Situational test)

3. வினாநிரல் முறை (Questionnarie)

4. கருமைக் கணக்கீட்டு முறை ( Personality Inventary)

5. தர அளவுகோல் முறை (Rating scale)

6. நேர்காணல் முறை (Interview)

7. புறத்தேற்று நுண்முறைகள் (Projective techniques)

என்பனவாகும்.

### 3.9.1 நேரடிக் காட்சி முறை (Observation)

இது ஒரு தனி மனிதனின் ஆளுமையை அளவிடும் பொதுவான உத்தி ஆகும். ஆய்வாளர் முதன் முதலாக எத்தகைய கருமைத் தன்மைக் கூறுகள் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை முன்கூட்டியே தெரிவு செய்கிறார் அதன் அடிப்படையில் அளக்கப்படும் நபர் பல்வேறு வாழ்க்கைச் சந்தர்ப்பங்களில் எத்தகைய செயல்பாடுகளில் ஈடுபடுகிறார் என்று பார்த்து அவருடைய ஆளுமைப் பண்புகளைக் குறிப்பெடுக்க வேண்டும். ஒரு மனிதர் நேர்க்காட்சிக்கு எடுபடும் குழுவினரிடம் தானும் ஓர் ஆளாக இணைந்து கொள்கிறார். தன்னை வெளிப்படுத்தாமல் ஆளுமை அளக்கும் நடத்தைகளைக் கண்டு குறிப்பெடுத்துக்கொள்கிறார். துல்லியமாக அளப்பதற்குப் பலவகைப்பட்ட தொழில் நுட்பக் கருவிகளையும் பயன்படுத்திக் காண்பதாகும்.

### 3.9.2 சூழல் சார்ந்த சோதனை (Situational Test)

இது ஒரு மனிதன் ஒரு குறிப்பிட்ட சூழலில் எவ்வாறு நடந்துகொள்கிறான் என்பதை அறிவது சூழல் சார்நத சோதனை ஆகும். குறிப்பாக ஒரு நபரின் பொறுமையை அளவீடு செய்ய விரும்பினால் அதற்குப் பொறுமையையும், கோபத்தையும் உருவாக்கும் சூழலை உண்டாக்கி அச்சூழலில் அவனுடைய நிலைமையை அளவிட்டுக் காணுதல் ஆகும்.

### 3.9.3 வினாநிரல் முறை (Questionnarie)

இது ஒரு குறிப்பிட்ட வினா நிரல் வழிமுறைகளுக்கு ஆளுமையை, அளக்கப்படும் நபர் தரும் விடைகளில் இருந்து அவருடைய ஆளுமைப் பண்புகளை அளவீடு செய்ய முடியும் என்பதாகும்.

### 3.9.4 கருமைக் கணக்கீட்டு முறை ( Personality Inventary)

இது ஒரு குறிப்பிட்ட நபரின் ஆளுமைப் பண்பினைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்காகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட முறையாகும். இது வினா நிரல்

வழிமுறையைப் போன்றே காணப்படும். எல்லா வகையான தகவல்களைச் சேகரிக்கவும், இது தன்மை இடத்தவருக்காக அமைக்கப்பட்ட ஒன்றாகும். எனவே "நான்", "எனது" என்ற அடிப்படையில் அளவைக் கூறுகள் உருவாக்கப்படுதலாகும்.

### 3.9.5 தர அளவுகோல் முறை (Rating scale)

சோதனைக்கு உட்படும் நபரைப் பற்றி அவருக்கு மிக நெருக்கமான வேறு நபர்களிடமிருந்து சில குறிப்பிட்ட ஆளுமைப்பண்புகள் பற்றித்தகவல்களைப் பெற முடியும். அதில் கணிப்பு விகிதம் செய்யப்பட வேண்டிய பண்புகள், கணிப்பு விகித அளவுகோல், அளப்பதற்குத் தகுதியான நீதிபதிகள் ஆகியவை கருவிகளாக அமையும் என்பதாகும்.

### 3.9.6 நேர்காணல் முறை (Interview)

நேருக்கு நேராகச் சந்தித்து ஆளுமை அளவீட்டுக்கு உரிய நபரிடம் இருந்து தகவல்கள்சேகரிப்பதே நேர்காணல் ஆகும். ஆளுமையை அளக்கவிருக்கும் நபரை முன்கூட்டியே ஒப்புதல் பெற்றபின், எத்தகைய ஆளுமைப்பண்புகள் மற்றும் நடத்தைகள் மதிப்பீடு செய்யப்படவேண்டும் என்பதை நேர்காண்பவர் முடிவு செய்கிறார். இதற்காகச் சில வினாக்களின் பட்டியலைத் தயார்படுத்திக் கொள்கிறார்.இம்முறையில் எல்லா வினாக்களுக்கும் பதிலைப் பெறமுடியும்.அவர்கள் பதிலளிக்கும் விதம், அவர்களின் நடத்தை,முகபாவம் போன்ற செயல்பாடுகளின் அடிப்படையில் ஆளுமை வரையறை செய்யப்படுகிறது.

### 3.9.7 புறத்தேற்று நுண்முறைகள் (Projective Techniques)

ஆளுமைச் சோதனையில் கொடுக்கப்படுகின்ற பொருள்கள், மனிதர்கள் ஆகிவற்றோடு ஆட்படுநரின் உள்ளம் இயல்பாக இயங்கும் தன்மையை அறியும் நுண்முறைகள் புறத்தோற்றுச் சோதனைகளாகும்.

### 3.10 ஆளுமைக்குக் கலைக்களஞ்சியம் தரும் பொருள்

ஆளுமை என்ற சொல் யாவரும் அறிந்த சொல்லாக இருந்தாலும் அதனை விளக்குவது என்பது கடினமான செயலாகும். உளவியல் அறிஞர்கள் இதன் இலக்கணம் குறித்து மாறுபட்ட கருத்துகளைக் கூறியுள்ளனர். கலைக்களஞ்சியம் அக்கருத்துக்களையெல்லாம் தொகுத்து சுருக்கமாகக் குறிப்பிடுகிறது.

ஆளுமை என்பது ஒருவனது உடலமைப்பே என்றும், ஒருவனது உடல் அமைப்பு அவன் வாழும் சமூகச் சூழ்நிலையின் தன்மைக்குத் தக அமையும் இயல்புகள் எல்லாம் ஒன்று சேர்ந்ததே என்றும், ஒருவனது இயல்பூக்கங்களும், உள்ளக்கிளர்ச்சிகளும் ஒருங்கே சேர்ந்தமைவதே என்றும், பாரம்பரிய இயல்புகளும் (Hereditary Trails), அனுபவத்தால் ஈட்டிய இயல்புகளும் (Acquired Trails), மனிதரது நனவிலி மனச் சக்தியும் (Uncoinscious Psychic Energy), சூழ்நிலை சக்தியும் (Environmental Forces) ஒன்றோடொன்று மோதுவதனாலும் இழைவதனாலும் அமைவதே என்றும் பலவாறு கருதுகின்றனர்.”[35]

### 3.11 கவிஞர் பாலாவும் ஆளுமை ஆய்வும்

இதுவரை ஆளுமை என்பதற்குரிய சொற்பொருள் விளக்கம், ஆளுமை என்பதற்குரிய உளப் பகுப்பாய்வாளர்களின் வரையறைகள், பல்வேறு அறிஞர்களின் உளப்பகுபாய்வுக் கோட்பாடுகள், அவற்றில் இருந்து பெறப்பட்ட ஆளுமை வகைகள்,ஆளுமைப் பண்புக் கூறுகள், ஆளுமைக் காரணிகள், ஆளுமையைக் கண்டறியும் முறைகள் ஆகியன குறித்து விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டன. இவ்விளக்கங்கள் வழியாக ஒரு தனிமனிதரின் ஆளுமையை எவ்வாறு கண்டறிவது என்பதற்கான சில வரையறைகளை பின்பற்ற இயலும். எந்தத் தனிமனிதரின் ஆளுமையை விளக்கப் போகிறோம் என்னும் நிலைப்பாடே ஆளுமை பற்றிய எவ்வகையான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதைத் தீர்மானிக்கிறது. அந்த வகையில் இந்த ஆய்வேடு தமிழ்க்கவிஞர் ஒருவரின் ஆளுமைப் படிநிலை

வளர்ச்சிகளை, நடத்தைக் கூறுகளை ஆராய முற்படுகிறது. அத்தமிழ்க்கவிஞர், கவிஞர் பாலா என்னும் நிலையில், அவருடைய வாழ்வை எவ்வகையான ஆளுமை அடிப்படையில் அணுகுவது என்பதை வரையறுத்துக் கொள்ளலாம். பொதுவாக மனிதனின் ஆளுமையைக் கண்டறிதல் என்னும் நிலையில் சற்று நெருங்கித் தமிழ்க்கவிஞர் ஒருவரின் ஆளுமைக்கூறுகளைக் கண்டறிதல் என்னும் நிலைக்கு முதலில் வந்துவிடலாம். இங்கு தனிமனிதன் என்ற பொது நிலையில் இருந்து கவிஞன் என்ற சிறப்புநிலை கிடைத்துவிடுகிறது. இந்நிலையானது கவிஞனாக உள்ள படைப்பாளியின் ஆளுமையை வரையறை செய்வதில், பொதுத் தன்மைகளைவிடச் சில சிறப்புத் தன்மைகளைக் கொண்டு அமைகிறது. அந்தவகையில் கவிஞர் பாலாவின் ஆளுமைக் கூறுகளைக் கண்டறிய ஆளுமை பற்றி இதுகாறும் கண்டவற்றிலிருந்து எவ்வகையான வழிமுறைகளைப் பின்பற்றலாம் என்பது இனிச் சுருக்கமாக கூறப்படுகிறது.

ஆளுமையைப் பற்றி ஆராய்ந்தவர்கள் கூறிய ஆளுமை பற்றிய விளக்கங்களும் கோட்பாடுகளும் ஒன்றிலிருந்து ஒன்று வளர்ந்த படிநிலை வளர்ச்சியாகவே காணப்படுகின்றன. ஒன்று இல்லாமல் மற்றொன்று வளர்ந்திருக்க முடியாது என்ற நிலையும் பெறப்படுகின்றது. ஆளுமை பற்றிய வரையறைகளும் இதற்குப் பொருந்தும். எனவே, கவிஞர் பாலாவின் வாழ்க்கைச் சூழல் மற்றும் அவரது படைப்புகள்,மூலமாக அவரது ஆளுமைக் கூறுகளை ஆராயலாம். அவ்வாறு ஆராய முனையும் பொழுது, உளப் பகுப்பாய்வாளர்கள் குறிப்பிடும் ஆளுமைக் கோட்பாட்டுக் கருத்துகள் பாலாவின் ஆளுமைத்திறனை, ஆளுமைவளர்ச்சியை அறியத் துணைபுரிகின்றன. இதனை இவருடைய வாழ்வின் பல படிநிலைகளைக் கொண்டும், அவர்வாழ்ந்த சமூகச் சூழல்களை அடிப்படையாகக் கொண்டும் பாலாவின் ஆளுமைத்திறனை அறியலாம்.

## 3.12 தொகுப்புரை

ஆளுமை என்ற இவ்வியலிலிருந்து கீழ்க்கண்ட முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

- ஆளுமை என்பது ஒருவருடைய மனப்பான்மையைப் பொறுத்து அமையும். ஒரு தனிமனிதனின் அகம், புறம் ஆகியவற்றின் வெளிப்பாடே ஆளுமை ஆகும்.
- ஆளுமை என்ற சொல் ஒரு காலத்தில் முகமூடி என்ற பொருளில் வழங்கப்பட்டது.
- ஆளுமை என்ற சொல் ஆண்மை என்பதன் திரிபாகும். இச்சொல் ஆண்களின் வீரத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.
- ஆளுமை ஒரு மனிதனின் தனித்தன்மையை உள்ளடக்கியது.
- ‘பெர்சனாலிட்டி’ என்ற ஆங்கிலச் சொல் பெர்சனா என்னும் லத்தின் சொல்லிலிருந்து பிறந்ததாகும்.
- ஆளுமை என்ற சொல் முதலில் ஒருவரின் உடல் தோற்றம், முகத்தோற்றம், நடை, உடை, பாவனை போன்ற சிறப்புக் கூறுகளின் ஒட்டுமொத்த வடிவம் எனப்பட்டது. ஆளுமை என்ற சொல் வெளித்தோற்றத்தை மட்டுமே உள்ளடக்கியதாகும்.
- ஆளுமை என்பது ஒரு மனிதனிடம் அப்படியே நிலைத்து இருப்பதில்லை. அது எப்பொழுதும் மாறிக்கொண்டே இருக்கும்.
- ஒருவரின் உள்ளம், குடும்பச் சூழல், சமூகச் சூழல், சமூகத்தூண்டல், எதிர்பார்ப்புகள், ஆசைகள், பெற்றோர் குழந்தை உறவு, தனிமனித உறவு, இவற்றில் ஏற்படும் வெற்றி தோல்விகள், மனிதனின் தேவைகள், அங்கீகாரம், இவற்றில் ஏற்படும் நிறைகுறைகள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதே ஆளுமை ஆகும்.

- ஆளுமை என்பது பாலுணர்வு, மனஅமைப்பு, சமூக உணர்வு, தன்னுணர்வு, தன்முனைப்பு போன்றவற்றின் அடிப்படையில் அமைகின்றது என்று உளப்பகுப்பாய்வாளர் கூறுகின்றனர்.
- குழந்தைப் பருவம் முதல் முதுமைப் பருவம் வரை ஆளுமை உருவாக்கம், வளர்ச்சிநிலை, மாற்றங்கள் ஆகியவை தொடர்கின்றன.
- மனிதனின் தேவைகள் எந்த அளவில் நிறைவு பெறுகின்றனவோ அந்த அடிப்படையில் அவனுடைய ஆளுமை அமைகிறது. மனித நடத்தை மாறுபாடுகளும், ஆளுமை மாறுபாடுகளும் ஒன்றோடொன்று தொடர்புடையவை.
- ஆளுமைக் கோட்பாடுகள் ஆறுவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவாகவும் ஒன்றிலிருந்து ஒன்று உருவானவையாகவும் உள்ளன. இதன்மூலம் ஒரு மனிதனின் ஆளுமை வகைப்படுத்தப்படுகிறது.
- அகவயப்பட்டவர்கள், புறவயப்பட்டவர்கள் என ஆளுமை இருவகையாகப் பிரிக்கப்படுகிறது. இதன்மூலம் ஒரு மனிதனின் குணநலன் வகைப்படுத்தப்படுகிறது.
- ஆளுமையின் பண்புக்கூறுகள் பல ஆய்வாளர்களால் விளக்கப்படுகிறது. இதன்மூலம் இப்பண்புக் கூறுகள் மரபுநிலைக் காரணி, சூழ்நிலைக் காரணி என்ற இருபெரும் காரணிகள் அடிப்படையில் உருவாகின்றன என்பது அறியப்படுகிறது.
- ஆளுமைத்திறன் என்பது ஒரு மனிதன் பிறந்ததிலிருந்து அவன் வாழும் வரை பல்வேறு சூழல்களில் எப்படி வளர்ச்சி அடைகிறது, எத்தகைய ஆளுமைத் தன்மையை அவன் அடைகிறான் என்பதைக்குறிக்கும்.

- ஆளுமை அகமதிப்பீடு முறை, புறமதிப்பீடு முறை என்ற முறைகளால் அளவீடு செய்யப்படுகிறது. இதன்மூலம் ஆளுமைத் திறன் கணக்கிடப்படுகிறது.
- பாலாவின் ஆளுமையை மதிப்பிட ஆளுமை பற்றிய விளக்கங்களும், கோட்பாடுகளும், வகைகளும், அளவிடும் முறைகளும் துணைபுரிகின்றன.

# குறிப்புகள்

1. Uday Shankar, Personality Development, p.5.
2. தமிழ் லெக்சிகன், தொகுதி.1.
3. வாழ்வியற்களஞ்சியம், தொகுதி -2. ப.798.
4. Udaysankar, Personality Development, p.5.
5. பெ.ஹென்றிஜீலியஸ், தமிழக நாட்டுப்புறப்பண்பாட்டில் முகமூடிகள் பன்முகப் பார்வைகள், ப.7.
6. S.K.Mangal, Advanced Educational Psychology, p.56.
7. Prince Morden, The Unconscious, p.532.
8. G.W.Allport, Personality- A Psychological Interpretation, p.28.
9. H.J.Eysenck, The structure of Human Personality, p.2.
10. இ.பா.வேணுகோபால், மணிக்கல்வி, உளவியல், ப.271.
11. Calvin, Hall, Gardne Lindzey, Theories of Personality , p.36.
12. செ.சாரதாம்பாள், இலக்கியமும் உளப்பகுப்பாய்வும், ப.73.
13. Clifford.T.Morgon,Introduction to Psychology, p.571.
14. எஸ்.சந்தானம்,கல்வியின் உளவியல் அடிப்படைகள், ப.163.
15. மேலது, ப.448.
16. வாழ்வியற்களஞ்சியம், தொகுதி -2,ப.681.
17. எஸ்.சந்தானம், மு.நூ.450.
18. தி.சு.நடராசன், நவீனகோட்பாட்டு ஆய்வுகள்(க.தொ), திறனாய்வும் உளவியலும், ப.14.
19. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - 2, ப.684.
20. எஸ்.சந்தானம், மு.நூ, ப.443.
21. மேலது, ப.92.
22. Udhaya Shankar, *op.cit.,* pp.8-9.
23. எஸ்.சந்தானம், மு.நூ, ப.467.
24. இ.பா.வேணுகோபால், மு.நூ, ப.26.
25. மேலது, ப.26.

26. வாழ்வியற்களஞ்சியம் தொகுதி-2, ப.679.
27. எஸ்.சந்தானம், மு.கூ.நூ, ப.93.
28. மேலது, ப.26.
29. இரா.காஞ்சனா, இலக்கியமும் உளவியலும், ப.16.
30. பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.26.
31. இ.பா.வேணுகோபால், மு.கூ.நூ, ப.88.
32. சியாமளா, ஔவையார், கபிலர் பாடல்களில் ஆளுமை, ம.கா.ப., எம்ஃபில் பட்டத்திற்கு அளிக்கப்பட்ட ஆய்வேடு, ப.10.
33. Calvin's.Hall, *op.cit*., pp.17-18.
34. S.K.Mangal, *op.cit.*, pp. 270-274.
35. கலைக்களஞ்சியம், தொகுதி 1, ப.460.